Registered as a NewsPaper

இலவச பிரதி

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 ஆனி -25 09-07-2005 சனிக்கிழமை ஓசை 141



S.M கோல்ட் ஹவுஸ்

வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.

T.P: 024-222 4247 (சி-12150)

# நோர்வே வெளிவிவகார அமைச்சர்

# அடுத்த வாரம் இலங்கை விஜயம்?

## புலிகளின் போக்குவரத்துக்கான பாதுகாப்பு விவகாரத்திற்கு தீர்வு காண முற்படுவார்

(கொழும்பு)

**நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் அடுத்த வாரமளவில் இலங்கைக்கு வருவாரென கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இவர் புலிகளின் போக்குவரத்துக்கான பாதுகாப்பு விவகாரத்திற்கு தீர்வு காண முற்படுவார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது போக்குவரத்து தொடர்பில் அரசாங்கத்தின் பாதுகாப்பு உறுதிமொழியை எதிர்பார்த்து விதித்துள்ள காலக்கெடு முடிவதற்கு இன்னும் ஆறு நாட்கள் எஞ்சியுள்ளன. இந்நிலையில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே இந்த விஜயம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## எழிலன் - ஹொக்லண்ட் சந்திப்பு ஒத்திவைப்பு

திருகோணமலை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹொக்லண்ட் ஆகியோருக்கிடையில் நேற்று சம்பூரில் நடைபெறவிருந்த சந்திப்பு தவிர்க்க முடியாத காரணங் களினால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இருநாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் திருமலைக்கு சென்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்ய சிறி.சு.கட்சியில் குழு நியமிக்க முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த சனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்வதற்காகக் குழுவொன்றை நியமிப்பதற்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை சனாதிபதியின் தலைமையில் சனாதிபதி மாளிகையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அடுத்த சனாதிபதி வேட்பாளரைத் தெரிவு செய்யவும், எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாகத் திட்டமிடவும் ஒரு குழுவை நியமிப்பதென முடிவு செய்யப்பட்டது.

சனாதிபதியின் தலைமையிலான இந்தக் குழுவில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அமைச்சர்கள் அனுரா பாண்டாரநாயக்க, இரத்தினசிறி விக்கிரமநாயக்க, மங்கள சமரவீர, டி.எம். ஜயரத்ன, சரத் அமுனுகம, மைத்திரிபாலசிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா, லக்ஷ்மன் கதிர்காமர், சுசில் பிரேம ஜயந்த, மேல்மாகாண ஆளுநர் அலவி மௌலானா, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் அனுருத்த ரத்வத்த ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

## பொதுக்கட்டமைப்பை ஆதரிக்குமாறு மு.காங்கிரஸ் மீது சர்வதேசம் அழுத்தம்

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண சபைக்கு ஆதரவளிக்குமாறு சர்வதேச சமூகம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிற்கு அழுத்தங்களைக் கொடுத்து வருவதாக அக் கட்சி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆழிப்பேரலை நிவாரண சபைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அமெரிக்கா, பிரித்தானியா,கனடா.ஜப்பான் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீமிடமும் கட்சியின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆழிப்பேரலை நம்பிக்கை நிதியத்திற்கு அமெரிக்கா பங்களிப்பு வழங்காது!

(கொழும்பு)

சட்ட ரீதியான கட்டுப்பாடுகள் காரணமாக ஆழிப்பேரலை நிவாரண சபையுடன் இணைந்த நம்பிக்கை நிதியத்திற்கு அமெரிக்கா பங்களிப்பு வழங்காதென அறிவித்துள்ளது.

ஆழிப்பேரலை நிவாரண சபையுடன் இணைந்த நம்பிக்கை நிதியம் சம்பந்தமாக அமெரிக்காவின் நிலைப்பாடு குறித்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் வசிக்கும் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட அனைத்து இன மக்களுக்கும் பாரபட்சமற்ற முறையில் துரிதமாக நிவாரண உதவிகளைப் பெற்றுக் கொடுக்க அமைக்கப்பட்டுள்ள ஆழிப்பேரலை நிவாரண சபைக்கு அமெரிக்கா தனது ஆதரவை வழங்குகிறது.

பாதிக்கப்பட்ட அனைத்து இன மக்களினதும் ஒத்துழைப்புடன் இந்த

(12ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் மீது குண்டுவீசுவது; காணிகளை அபகரிப்பது அரச பயங்கரவாதம் இல்லையா? - மாவை கேள்வி

(கொழும்பு)

மக்கள் மீது குண்டு வீசுதலும், உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களை அவர்களது சொந்த இடங்களிலிருந்து விரட்டியுள்ளதும் பயங்கரவாதமில்லையா? எனக் கேள்வியெழுப்பியுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர். மாவை சேனாதிராஜா, இந்த அரச பயங்கரவாதத்திலிருந்து தமிழ்மக்களைப் பாதுகாக்கவே தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதப்போராட்டம் நடத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதிகளுக்கான நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான தீர்மானத்தை அங்கீகரிக்கும் சட்டமூலம் மீதான

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்தக்கோரி மட்டு.கல்லடியில் மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்!

(மட்டக்களப்பு)

200 மீற்றர் கடல் பாதுகாப்பு வலயத்தை இரத்து செய்யக்கோரியும், பொதுக்கட்டமைப்பை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் எனக் கோரியும் நேற்று மட்டக்களப்பு கல்லடியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆழிப்பேரலையினால் தமது இருப்பிடங்களை இழந்த பொதுமக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

திருச்செந்தூர், நாவலடி. டச்பார், கல்லடி, முகத்துவாரம் மற்றும் வேலூர் கொலனி ஆகிய இடங்களைச் சேர்ந்த நூற்றிற்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

கடல்வளம் மற்றும் வாவி வளம் ஆகியவற்றை நம்பி வாழும் இந்த மக்கள் தங்களுக்கான இருப்பிடங்களை ஏற்கனவே வசித்து வந்த இடங்களிலேயே ஏற்படுத்தித்தர வேண்டும் என்றும் இந்த ஆர்ப்பாட்டத்தின்போது மக்கள் கோரிக்கையையும் முன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## லண்டன் குண்டுத்தாக்குதலின் எதிரொலி

## முஸ்லிம்கள் மீது தாக்குதல் மசூதி மீது குண்டு வீச்சு!

(பிரிட்டன்)

லண்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொடர் குண்டுத்தாக்குதலுக்கு இஸ்லாமியத் தீவிரவாதிகள் - அல்-ஹைதா இயக்கம் காரணம் என ஊகங்கள் எழுந்துள்ளதால் அங்கு வரும் முஸ்லிம்மக்கள் சிலர் தாக்குதலுக்கு உள்ளானதுடன் மசூதி ஒன்றிற்கும் பெற்றோல் குண்டு வீசப்பட்டுள்ளது என லண்டன் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பிரிட்டிஷ் முஸ்லிம்கள் பாதுகாப்பு அமைப்பின் தலைவர் அசாத்அலி கூறுகையில், லண்டன் நகரில் ஒரு முஸ்லிம் தாக்கப்பட்டதாகவும், லண்டன் நகருக்கு வெளியே இரண்டு முஸ்லிம்கள் தாக்கப்பட்டதாகவும் கூறிய அவர், மசூதி மற்றும் இஸ்லாமிய மையங்களுக்கு வசவுக்கடிதங்கள் வர ஆரம்பித்துள்ளதாகவும் சுமார் மூவாயிரம் முதல் நான்காயிரம் கடிதங்கள் வரை வந்துவிட்டதாகவும் கூறியுள்ளார். இதேவேளை மசூதி அருகே மிரட்டல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறுமி மீது பாலியல் வல்லுறவு இளைஞனுக்கு 10 வருட கடூழிய சிறை

(யாழ்ப்பாணம்)

16 வயதிற்குட்பட்ட சிறுமியொருத்தியினை பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்திய குற்றத்தின் கீழ் இளைஞன் ஒருவரிற்கு யாழ். மேல் நீதிமன்று பத்துவருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

2001ஆம் ஆண்டின் சனவரி மாதப் பகுதியில் அனலைதீவுப் பகுதியில் இடம்பெற்ற பாலியல் வல்லுறவுச் சம்பவம் தொடர்பிலேயே யாழ். மேல் நீதிமன்று இத்தீர்ப்பினை வழங்கியுள்ளது.

மேற்படி பாலியல் வல்லுறவுச் சம்பவம் தொடர்பான விசாரணை யாழ். மேல் நீதிமன்று நீதவான் கே.பி.எஸ். வரதராசா முன்னிலையில் கடந்த வெள்ளி இடம்பெற்றது. அரச தரப்பில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## நல்லூர் பிரதேச செயலக கலாச்சாரவிழா நிகழ்வுகள்

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலக கலாச்சார பேரவை நடத்தும் கலாச்சார விழா இன்றும், நாளையும் இடம்பெற வுள்ளது.

நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் இரு நாட்களும் பிற்பகல் 2.00மணிக்கு நிகழ்வுகள் ஆரம்ப மாகும்.

இந்நிகழ்வுகளுக்கு நல்லூர் பிரதேச செயலக கலாச்சார பேரவைத்தலைவரும்,பிரதேச செயலருமான திருமதி சு.தெய்வேந்திரம் தலைமைதாங்குகின்றார்.

இன்றைய நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேல திக அரசாங்க அதிபர் ஆசிவசுவாமியும், கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும் கலந்துகொள்வர்.

நாளைய நிகழ்வுகளுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் க.கணேஸ், கௌரவ விருந்தினராக தமிழீழ கலைபண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவைஇரத்தின துரை ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

### வரி விளம்பரம்

**காணிவிற்பனைக்குண்டு**

வள்ளிபுனம் சந்திக்கருகாமையில் தென்னங்கன்று மற்றும் பயன் தரு மரங்களுடன் 2ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு. வாணி நகைமாடம்,கனகபுரம், கிளிநொச்சி. (6332)

**விற்பனைக்குண்டு**

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த **5kv** தொடக்கம் **100kv** வரையான மின் பிறப்பாக்கிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்புக்கு: 0777111886 (6342)

**தவறிவிட்டது**

சன்முகநாதன் ஜீபத் ஆகிய எனது அடையாள அட்டையும், பயண அனுமதியட்டையும் விசுவமடுவில் இருந்து கந்தபுரம் ஊடாக வன்னேரி சென்று மல்லாவி திரும்புகையில் தவறி விட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் மல்லாவி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (6004)

**தவறிவிட்டது**

04.07.2005 அன்று விசுவமடுவுக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் லோகநாதன் இராஜராஜேஸ்வரி என்பவரின் பங்கீட்டு அட்டை, நிவாரண முத்திரை, வெள்ளைக்காட் என்பன பொலித்தீன் பையுடன் தவறிவிட்டது. இதைக் கண்டுடெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையிலோ அல்லது கரைச்சி வடக்கு புன்னைநீராவி கிளையிலே கொடுக்கவும். சன்மானம் வழங்கப்படும். தகவல்:- ப.அமுதன் (6346)

## விவசாயச்செய்கையை ஊக்குவிக்க நீர்இறைக்கும் உபகரணங்கள் வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமியின் பின் வீழ்ச்சியடைந்த கரையோர விவசாயச் செய்கையை ஊக்குவிக்க வத்திராயனில் தண்ணீர் இறைக்கும் உபகரணங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன.

வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் விவசாய பயிர்ச்செய்கை வீழ்ச்சியடைந்து உள்ளது. இதனால் இப்பகுதியில் மரக்கறிகளின் விலை உயர்ந்து காணப்படுகின்றது.

இப்பகுதி விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக முதற்கட்டமாக நீர் இறைக்கும் உபகரணங்ளை வடமராட்சி தெற்கு கமக்கார சங்கம் இப்பகுதி விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. (தீ)

## பொருண்மிய மதியுரையகத்தில் நீர்முகாமைத்துவ கருத்தரங்கு

(கிளிநொச்சி)

பொருண்மியமதியுரையகத்தில் நீர்முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு நேற்று மு.ப.9.30 மணிக்கு இடம்பெற்றது.

இக்கருத்தரங்கின் முதல் நிகழ்வாக தலைமையுரையினை பொருண்மிய மதியுரையகத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் சுகுணன் ஆற்றினர். அதனையடுத்து தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த தர்மாவினால் நீர்முகாமைத்துவம் தொடர்பான கருத்தரங்கு நடாத்தப்பட்டது.

இக்கருத்தரங்கிற்கு பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். இதில் நீரினை எவ்வாறு சுத்திகரிக்கலாம் என்பது தொடர்பாகவும், விவசாயத்திற்கு நீரினை எவ்வாறு சிக்கனமாகப் பயன் படுத்தலாம் என்பது தொடர்பாகவும், நீரின்மூலம் எவ்வாறான நோய்கள் ஏற்படும் என்பது பற்றியும், இதனை எவ்வாறு தடுக்கலாம் என்பது பற்றியும் நல்ல பல விடயங்கள் எடுத்துக் கூறப்பட்டன.

நிகழ்வில் கலந்துகொண்ட பயனாளிகள் வினாக்களைக் கேட்டு அதற்கான பெறுபேற்றையும் பெற்றுக் கொண்டனர்.

## வடமராட்சி கிழக்கு சமாசத்தால் தாளையடி சங்கத்திற்கு படகு வழங்கல்

(அலுவலக செய்தியாளர்)

வடமராட்சி கிழக்கு சமாசத்தினூடாக தாளையடி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்திற்கு நான்கு படகுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கு கடற்றொழில் கூட்டுறவு சங்கங்களின் சமாச அலுவலகத்தில் வைத்து நான்கு படகுகளும், தாளையடி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்திடம் வழங்கப்பட்டன. (தீ)

### கும்பாபிஷேக நிகழ்வு

முரசுமோட்டை சேற்றுக்கண்டி முத்துமாரி அம்மன் ஆலய எண்ணெய்க்காப்பு நிகழ்வும், கும்பாபிஷேக நிகழ்வும் நடைபெறவுள்ளது. வரும் 12ஆம்திகதி எண்ணெய்க் காப்பு நிகழ்வும், 13ஆம்திகதி கும்பாபிஷேக நிகழ்வும் இடம்பெற இருபதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (46)

## புது. பொன்னம்பலம் மருத்துவமனையில் 22ஆம்திகதி கண்சத்திரசிகிச்சை

(அலுவலகசெய்தியாளர்)

புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனையில் எதிர்வரும் 22ஆம் திகதியன்று கண்சத்திரசிகிச்சை நடைபெறவுள்ளது.

கண்ணில் (கற்றாக்) பூவிழுந்தவர்கள் எதிர்வரும் 13ஆம்,20ஆம் திகதிகளில் புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனைவெளிநோயாளர் பிரிவிலும், 14ஆம், 21ஆம்திகதிகளில் கிளிநொச்சி பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவிலும் தங்கள் பதிவுகளை மேற்கொண்டு சத்திரசிகிச்சைக்கான அனுமதிக்கடிதத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியசாலை நிர்வாகத்தினர் வேண்டியுள்ளனர். (சோ)

## காணவில்லை

பிரித்தானியா ஐக்கிய இராச்சியத்து (London) கடவுச்சீட்டு இலக்கம் 54020053 முகமாலை இராணுவச் சோதனைச் சாவடியில் 20.06.2005 அன்று காணாமல் போய்விட்டது. இக் கடவுச்சீட்டைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து பின்வரும் முகவரியில் கொடுக்கவும். அல்லது கீழ்க் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்கவும்.

செல்வி.மா.தே.மான்
Post Office Road
Kondavil;
chavakachcheri
0776949750
0212285009

(சி-12318)

## துயர் பகிர்கிறோம்

அமரர்

திரு. இராமநாதர் நவரட்ணம்

(கிராம அலுவலர் கரும்புள்ளியான்)



மலர்வு 05.03.1947 உதிர்வு 06.07.2005

நீண்ட காலமாக மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராகக் கடமையாற்றி அயராது மக்களுக்காக அரும்பணியாற்றிய திரு. இ. நவரட்ணம் அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பம், உற்றார், உறவினர் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, இவருக்கு எமது அஞ்சலியையும் காணிக்கை ஆக்குகின்றோம்.

பொறுப்பாளர்கள்,
பணியாளர்கள்,
தமிழீழ நிர்வாகசேவை,
முல்லைக் கிளைச் செயலகம்,
துணுக்காய்.

(6347)

## சாவு அறிவித்தல்



### அமரர் நல்லதம்பி-தவராசா (இராசு)

மண்ணில் 14-16-1963 | இலண்டன் | விண்ணில் 19.06.2005

முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இலண்டன் லூசியத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திரு. நல்லதம்பி - தவராசா (இராசு) 19-06-2005 அன்று இலண்டனில் அகலாச்சாவடைந்துள்ளார்.

அன்னார் திரு.நல்லதம்பி, அமரர் திருமதி சோதிலட்சுமி தம்பதிகளின் அன்புப்புதல்வனும், கலையரசி (இலண்டன்) அவர்களின் பாசமிகு கணவரும், கஸ்தூரி, கோகிலன் (இலண்டன்) ஆகியோரின் பிரியமுள்ள தந்தையும், திரு சண்முகநாதன், அமரர் திருமதி இரத்தினமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், அழகேந்திரராசா (வற்றாப்பளை), சிவபாதசுந்தரம் (இலண்டன்), புவனேந்திரராசா (இலண்டன்) தேவிகாரணி (புதுக்குடியிருப்பு), சிறிஸ்கந்தராசா (இலண்டன்), மலர்விழிதேவி (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்புச்சகோதரனும், பொன்மணி (வற்றாப்பளை), குலவதி (இலண்டன்), விஜி (இலண்டன்), பாலசிங்கம் (புதுக்குடியிருப்பு), புஷ்பரஞ்சிதம் (இலண்டன்), தியாகராசா (புதுக்குடியிருப்பு), சுகந்தன் (இலண்டன்), கோகிலா (உதவி அரச அதிபர் அலுவலகம் துணுக்காய்) ஆகியோரின் மைத்துனருமாவார்.


அன்னாரின் நல்லடக்கம் 09-07-2005 இன்று காலை 11.00மணிக்கு (இலண்டன் நேரப்படி) தாயக நேரப்படி பி.ப.4.00மணிக்கு இலண்டன் மாநகரில் நடைபெறவுள்ளது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கின்றோம்.

-தகவல்-

திரு.க.தியாகராசா (மைத்துனர்)
அம்மன் வணிக மாளிகை,
புதுக்குடியிருப்பு.

(சி-12292)

# லண்டன் நகர் மீதான தீவிரவாத தாக்குதல்; ஐக்கிய நாடுகள் பாதுகாப்புசபை கண்டனம்



**பிரிட்டனின் லண்டன் நகரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குண்டுவெடிப்புச்சம்பவங்களை ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபை கண்டித்துள்ளது. இந்தச் சம்பவத்தையடுத்து அவசரமாக கூடிய ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை லண்டன் நகரில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் பயங்கரவாதசெயல் எனத்தெரிவித்துள்ளது.**

தொழில்வள நாடுகளை இலக்காகக் கொண்டு தீவிரவாதிகள்தாக்குதலை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளதாக நேட்டோ அமைப்பின்பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் பயங்கரவாதத்தை ஒடுக்க உலக சமூகங்கள் ஒன்றிணைந்துசெயற்பட வேண்டுமெனவும் அவர் கூறினார்.

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட அமெரிக்காவிற்கான பிரித்தானிய தூதுவர் கருத்துவெளியிடுகையில்; லண்டன் நகரில் சுமார் 200 நாடுகளைச் சேர்ந்த 300 மொழிகளைப் பேசக்கூடிய பல இன மக்கள் ஒன்றாகஇணைந்து வாழ்வதாகக் கூறினார். இதனால் லண்டன் போன்ற தொழில்வளநகரங்களைப் பயங்கரவாத தாக்குதலிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் அவர்வலியுறுத்தியுள்ளார்.

## லண்டன் மீதான தீவிரவாத தாக்குதல்: ஜி-8 மாநாட்டை எந்தவிதத்திலும் பாதிக்காது

- ஜக் சிரோ

லண்டனில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பயங்கரவாத பாரிய தொடர் குண்டுத்தாக்குதல்கள் ஜி-8 உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் கைத் தொழில்மயநாடுகளின் தலைவர்களது திடசங்கற்பத்தை சீர்குலைக்கப்போவதில்லையென பிரிட்டன், வெளிவிவகார அமைச்சர் ஜக் சிரோ தெரிவித்துள்ளார்.

இத்தலைவர்கள் முக்கியமான உடன்படிக்கையை எட்டியே தீர்வார்களென அவர் கூறியுள்ளார். லண்டனில் இடம் பெற்ற இத் தாக்குதல் சம்பவத்தையடுத்து ஸ்கொட்லாந்தில் பாதுகாப்பு பெரிதும் பலப்படுத்தப்பட்டுள்ளது. அங்கு நடைபெறும் ஜி-8 மாநாட்டில் சுவாத்திய மாற்றங்கள் தொடர்பான பேச்சுக்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பிரித்தானியாவின் தீவிரவாதத்திற்கு எதிரான செயற்பாடே லண்டன் மீதான தாக்குதல்




-ரைஸ்

லண்டன் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தையடுத்து அமெரிக்காவில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தை கண்டித்துள்ள அமெரிக்க இராஜாங்க செயலர்கொண்டலிசாரைஸ் நேற்று முன்தினம் அமெரிக்கா விலுள்ள பிரிட்டன் துதரகத்திற்கு சென்று அங்குள்ள அனுதாப ஏட்டிலும் கையெழுத்திட்டுள்ளார்.

பிரிட்டன் தீவிரவாதிகளுக்கெதிராக போரிடுவதனாலேயே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். அத்துடன் திவீரவாதத்திற்கெதிராகப்போரிடும் அமெரிக்காவுடன் இணைந்து செயற்படும் சிறந்த நட்பு நாடு பிரிட்டன் எனவும் அவர்கூறியுள்ளார்.

## இதுபோன்ற தீவிரவாத தாக்குதல்கள் எமது வாழ்க்கை முறையை சீர்குலைக்காது

### பிரிட்டன் பிரதமர் ரொனிபிளேயர்



லண்டன் நகரில் நேற்று முன்தினம் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவங்களையடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வீதி மற்றும் சுரங்கப் போக்குவரத்துக்கள் நேற்று மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

லண்டன் நகரில் இயல்பு வாழ்க்கை ஓரளவிற்குத் திரும்பினாலும் நேற்று முன்தினச் சம்பவங்களின் தாக்கம் மக்களை இன்னமும் பீடித்துள்ளது. பொலிசார் அனைத்துப் பகுதிகளிலும் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.இதனிடையே ஈவிரக்கமற்ற இந்தக் கொடுஞ்செயலிற்குக் காரணமானவர்களைக் கண்டுபிடிக்க உளவுத்துறையினரும் பொலிசாரும் மாபெரும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர். நேற்று முன்தினச் சம்பவத்தில் 60க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டும் 700 பேர் காயமடைந்துமுள்ளனர். லண்டனில் பரபரப்புமிக்க லிவர்பூல் சுரங்க ரயில் நிலையத்திலும் சாவிஸ்ரார் என்ற இடத்தில் பேருந்துகளிலும் இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. ஐரோப்பாவில் அல்-ஹைதாவின் புனிதப் போருக்கான இரகசியப் பிரிவு என்று கூறிக்கொள்ளும் தீவிரவாத அமைப்பு இந்த சம்பவங்களிற்குப் பொறுப்பேற்றுள்ளது.அமெரிக்கா உட்பட பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. தீவிரவாதிகள் மத்திய லண்டனில் நேற்றுமுன்தினம் ஏழு இடங்களில் நடத்திய தொடர் குண்டு வெடிப்புச்சம்பவங்களை கடுமையாகக்கண்டித்த பிரிட்டன் பிரதமர் ரொனிபிளேயர், பிரிட்டன் மக்கள் மிகவும் உறுதிப்பாட்டுடன் இருப்பதாகவும் தீவிரவாத நடவடிக்கைகள் தங்கள் வாழ்க்கை முறையைக்குலைக்க முடியாது என்றும் கூறினார்.

## பாரிய புலனாய்வு விசாரணை ஆரம்பம்

லண்டன் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தொடர்குண்டுத்தாக்குதல்களையடுத்து பாரிய புலனாய்வு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேவேளை இத்தாக்குதல்களில் அல்-ஹைதாவின் சாயல்கள் தென்படுவதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.எலிசபெத் மகாராணி வைத்திய சாலைகளுக்கு சென்று சம்பவத்தில் காயமடைந்தவர்களுக்கு ஆறுதல் கூறிவருகின்றார். பிரதமர் ரொனி பிளேயர் ஜி-8 உச்சி மாநாட்டில் இறுதி நாள் நிகழ்விற்கான ஆயத்தங்களை மேற்கொண்டுவருகின்றார்.

## ஹெயிட்டியில் சூறாவளி, தொடர்மழை ஏராளமானோர் இறந்திருக்கலாம் என அச்சம்

ஹெயிட்டியின் தென்மேற்குப்பகுதியில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து பெய்துவரும் சூறாவளியுடனான மழை காரணமாக அதிகளவிலானோர் பாதிக்கப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

சுமார் 25 சென்ரிமீற்றர் உயரத்திற்கு மழைபெய்துள்ளதாகவும் மணிக்கு 115 மீற்றர் வேகத்தில் கடும் காற்று வீசிவருவதாகவும் ஹெயிட்டி வானிலை மையம் தெரிவிக்கின்றது.

இச் சூறாவளியினால் சிறிய குடிசைகள் அடித்துச் செல்லப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் இச்சூறாவளித் வெள்ளத்தினால் உயிரிழந்தோர் அல்லது காயமடைந்தோர் தொடர்பான தகவல்கள் எதுவும் வெளிவரவில்லை. எதிர்வரும் தினங்களில் இந்த சூறாவளி ஜமேக்கா, ஹெய்மன்தீவு, கியூபாவின் தென்கிழக்குப் பகுதி மற்றும் புளோரிடாவின் சிலபகுதிகளைத் தாக்கும் சாத்தியம் உள்ளதாகவும் ஹெய்ட்டியின் வானிலை ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கடந்த ஆண்டுகளில் ஹெயிட்டியில் ஏற்பட்ட மழைவெள்ளம் மற்றும் மண் சரிவினால் ஆறாயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பிலிப்பைன்ஸ் அமைச்சரவையில் எட்டு அமைச்சர்கள் இராஜினாமா

(மணிலா)

பிலிப்பைன்ஸ் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும்எட்டு அமைச்சர்கள் பதவி விலகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. சனாதிபதி அராயோ இராஜினாமா செய்ய வேண்டுமென்றும் அவர்கள் கோரிக்கைவிடுத்துள்ளார்கள்.


தேர்தல் மோசடிகளில் ஈடுபட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள குளோரியோ அராயோ இராஜினாமாக் கோரிக்கைகளை நிராகரித்து அமைச்சர்களைபதவி விலகுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த ஆண்டு நடந்த தேர்தலுக்கான வாக்குகள்எண்ணப்பட்டுக் கொண்டிருந்த சமயம் தேர்தல் அதிகாரிகளை தொலைபேசியில் தொடர்பு கொள்ளமுனைந்தது உண்மைதான். ஆனால் மோசடிகளை மேற்கொள்ளவில்லையென சனாதிபதி தெரிவித்துள்ளார். இச் சர்ச்சைகளின் தொடர்ச்சியாக பதவிவிலகும் அமைச்சர்கள் புளோரியாவை சாடியுள்ளார்கள்.

## தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட எகிப்து தூதர் கொல்லப்பட்டார்

ஈராக்கில் ஐந்து நாட்களுக்கு முன்னர் கடத்தப்பட்ட அந்நாட்டிற்கான எகிப்துத் தூதர் இகாபல்சரிப் தீவிரவாதிகளினால் கொல்லப்பட்டுவிட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர் கொல்லப்பட்டதை அல்-ஹைதா பயங்கரவாத இயக்கம் இணையத்தளத்தின் மூலம் உறுதிசெய்துள்ளது. ஈராக்கில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய அரசு அண்டை நாடுகளுடன் இராஜஜீக உறவுகளைச் சீர்ப்படுத்தி வருவதைத் தடுக்கும் முயற்சியாக அந்நாட்டிலுள்ள அல்-ஹைதா தீவிரவாத இயக்கம் இந்தத்தாக்குதலை நடத்தியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தூதர் கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து பக்தாத்திலுள்ள தங்கள் தூதரக ஊழியர்கள் அனைவரையும் திரும்பப் பெறுவதாகத் எகிப்து அறிவித்துள்ளது.

## விவசாய ஏற்றுமதிக்கான அனைத்து மானியங்களும் 2010 ஆம் ஆண்டளவில் நீக்கப்படும்



- புஸ்

(CNN)

2010 ஆம் ஆண்டளவில் உலக வர்த்தக நிறுவனம் டபிள்யூ. ரி. ஒ.வின் பேச்சுக்கள் மூலம் அனைத்து விவசாய ஏற்றுமதிகளுக்கான உதவித் தொகைகள் நீக்கப்படுமென்று அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஆபிரிக்காவில் உள்ள வறுமையை ஒழிப்பதில் உலகம் முழுவதிலுமுள்ள இலட்சக்கணக்கான மக்களின் முறையான எதிர்பார்ப்புகளை எட்டு நாடுகள் குழுவின் உச்சிமாநாடு தீர்த்துவைக்குமென்று பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஒப்பந்தம் குறித்து அமெரிக்காவிற்கும், இதர தொழில்துறை நாடுகளுக்குமிடையே எழுந்துள்ள கருத்து வேறுபாடுகள் தீர்க்கப்படாது என்று கூறிய ரொனிபிளேயர் உலகின் வெப்பநிலை அதிகரிப்பை எதிர்காலத்தில் சமாளிக்கும் வகையில் அதற்கு வழிகாண கருத்து ஒற்றுமை ஏற்படுத்தப்படுமென்று நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜி-எட்டு நாடுகளின் உச்சி மாநாட்டில் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றான உலக வெப்பநிலை அதிகரிப்பிற்கு எதிரான கருத்தை தொடக்கி வைத்துப் பேசிய ரொனிபிளேயர் கரியமில வாயு வெளியேற்றத்தினைக் குறைக்க இலக்குகள் நிர்ணயிப்பது என்ற 'கியூட்டோ ' ஒப்பந்தத்தை அமெரிக்கா பின்பற்ற மறுப்பதை ஒப்புக்கொண்டுள்ளார். முன்னதாக கடந்த ஆண்டு செயற்பாட்டிற்கு வந்த கியூட்டோ ஒப்பந்தத்தை எட்டு நாடுகளின் உச்சிமாநாட்டில் அமெரிக்கா மட்டும் பின்பற்ற மறுக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இருவேறு தாக்குதல் சம்பவங்களில் இரண்டு பலஸ்தீன படையினர் பலி

மேற்குக் கரை கஸாவில் இடம்பெற்ற இரு வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் பலஸ்தீனப் படையினர் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

பலஸ்தீன ஆயுததாரிகளால் இஸ்ரேலியத் துருப்பினர் கொல்லப்பட்ட சில மணித்தியாலங்களின் பின்னர் பலஸ்தீனப் படையினர் இருவர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேற்குக்கரை காஸாபிரதேசத்தில் பலஸ்தீனப்படையினருக்கும் இஸ்ரேலியப்படையினருக்குமிடையில் நடைபெற்ற மோதலில் பலஸ்தீன படைவீரர் ஒருவர் உயிரிழந்தார்.

இரண்டு ஆயுதம் தாங்கிய தீவிரவாதிகள் யூதவழிபாட்டுத் தலத்தை இலக்கு வைத்து தாக்குதல் நடத்த முற்பட்டபோது தாம் அவர்களை நோக்கி துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாக இஸ்ரேல் படை கூறுகின்றது. இதேவேளை தெற்கு காஸாப் பகுதியிலுள்ள குடியேற்றத்திற்கருகில் வைத்து மற்றைய படைச்சிப்பாய் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

# வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சின் இழுத்தடிப்பால் கிளி-வட்டக்கச்சி பிரதான வீதி புனரமைப்பு இடைநிறுத்தம்!

## –ஒதுக்கப்பட்ட நிதியை வழங்க தாமதம் ஏன்?

(அலுவலக செய்தியாளர்)

**கிளிநொச்சி-வட்டக்கச்சி பிரதான வீதியின் புனரமைப்புப்பணிகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன. புனரமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சு வழங்க இழுத்தடித்து வருவதால் இந்த நிலைதோன்றியுள்ளது.**

கிளிநொச்சி-வட்டக்கச்சி பிரதான வீதியின் 7.2 கிலோமீற்றர் பகுதி புனரமைப்புப்பணிகள் மேற்கொள்ளப் பெற்று வந்துள்ள நிலையில் தற்போது புனரமைப்புப் பணிகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில்; மேற்படி வீதிப்புனரமைப்புப் பணிகளை ஒப்பந்தக்காரர்கள் மேற்கொண்டு ஓரளவு பணிகளை நிறைவு செய்துள்ள பொழுதிலும் ஒப் பந்தக்காரர்களுக்கான கொடுப்பனவுகள் கடந்த நான்கு மாதகாலமாக வழங்கப்படாமையின் காரணமாக ஒப்பந்தக்காரர்கள் மேற்கொண்டு வீதியின் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்ளத் தயக்கம் காட்டி வருவதாகவும், குறிப்பாக வட்டக்கச்சி கால்நடைபண்ணை வீதியின் 5.4 கிலோமீற்றருக்கான பணிகள் 6.45 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு மேற்கொள்ளப் பெற்றுள்ள பொழுதிலும் அதற்கான கொடுப்பனவுகளை மாகாண அமைச்சு நான்கு மாதகாலமாக விடுவிக்காமையின் காரணமாகவே மேற்கொண்டு வீதிப்புனரமைப்புப் பணிகள் தாமதமடைவதற்குக் காரணமாக அமைந்துள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.

(சோ)

## கொடுப்பனவு

யாழ்.தேசிய கல்வியல் கல்லூரியில் கல்விபயிலும் மாணவர்களுக்கான யூன்மாதக் கொடுப்பனவு இன்று வழங்கப்படவுள்ளதென யாழ்.தேசிய கல்வியல்கல்லூரி பீடாதிபதி கமலநாதன் தெரிவித்துள்ளார். (சோ)

## இந்துஆலயங்களின் ஒன்றியம் வட்டக்கச்சி பிரதேசத்தில் தெரிவு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி இராமநாதபுரம் பிரதேசங்களின் இந்து ஆலயங்களுக்கான ஒன்றியத்தின் தெரிவு வட்டக்கச்சி மாவீரர் மண்டபத்தில் வட்டக்கச்சி பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் சுடர் தலைமையில் இடம்பெற்றது.

தலைவராகஇரா.பசுபதிப் பிள்ளை, உபதலைவராக மு. குமாரசாமி, செயலாளராக க. தர்மசூரியர், உபசெயலாளராக இ.யோகநாதன், பொருளாளராக மு. தியாகராசா ஆகியோரும், உறுப்பினர்களாக பொ.பவாசண்முகம், கோ.வடிவேல், க.சின்னத்தம்பி, மு.துரை, இ.இராஜரட்ணம், க.கிருபாகரன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## கசிப்பு வடிப்பு அதிகரிப்பு

மன்னார் புதுக்கமம் வட்டுபித்தான் மடுப்பகுதியில் கசிப்பு வடிப்பு அதிகரித்து வருகின்றது. இது தொடர்பாக கிராம அபிவிருத்திச் சங்கமும், பொது அமைப்புக்களும் எதிராக நடவடிக்கை எடுத்த சமயத்தில் இருதரப்பினருக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. வேளை கசிப்பு வடித்துவரும் நபர் ஒருவர் விழுந்து காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ஆனால் அவர்பொலிசாருக்கு கொடுத்த வாக்குமூலத்தில் ஊர்மக்களால் தாக்கப்பட் டதாகத் தெரிவித்துள்ளார். எனினும் பொலிசாரிடம் மக்கள் சம்பவம் பற்றி விளக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(18)

## கிளிநொச்சி நகரில் விபத்து இருவர் காயமடைந்தனர்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி ஏ- 9 வீதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வீதி விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.



ஏ- 9 வீதியில் கரடிப்போக்கு நோக்கி வேகமாக சென்று கொண்டிருந்த உந்துருளி முன்னே சென்று கொண்டிருந்த டிப்பர் ரக வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்ட போது கட்டுப்பாட்டை இழந்து வீதியின் நடுவில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது. விபத்துக்குள்ளாகிய இடத்தில் இருந்து இருபது அடி தூரம் வரை உந்துருளியை ஓட்டிவந்தவர் தூக்கிவீசப்பட்டார். இவ்வாறு தூக்கி வீசப்பட்ட கிளிநொச்சி செல்வாநகரைச் சேர்ந்த சீலன் என்பவர் தலையிலும் உடலின் ஏனைய பகுதிகளிலும் காயமடைந்த நிலையில் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்துக்குள்ளான உந்துருளி மோசமாக சேதமடைந்துள்ளது. (லோ.தீ)

## முல்லைக் கடற்பரப்பில் மீனவர்கள் சிறிலங்கா கடற்படையால் அச்சுறுத்தல்

(முல்லைத்தீவு)

சுனாமிக்கு பின் தொழிலுக்கு செல்லும் முல்லைத்தீவு மீனவர்கள் சிறிலங்கா கடற்படையினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர். கடந்த புதன்கிழமை அதிகாலை நான்கு மணிக்கு முல்லைத்தீவு கள்ளப்பாட்டைச் சேர்ந்த விஜயரட்ணம்-விஜயகாந்தன் (வயது-21) தியாகராசா-துவாரகன் (வயது-22) ஆகிய இருவரும் தூண்டில் தொழிலுக்கு சென்றபோது இவ்வாறு சிறிலங்கா கடற்படையினரால் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது; கடந்த புதன்கிழமை அதிகாலை நான்கு மணிக்கு தொழிலுக்கு சென்று தூண்டில்கயிற்றை போட்டு மீன்பிடித்துக்கொண்டிருக்கும் போது காலை பத்து மணியளவில் சிறிலங்கா கடற் படையினர் டோறா படகில்வந்து எமது படகை சுற்றி வந்தனர். அப்போது நாம் இருவரும் பயத்தில் தூண்டில் கயிற்றை இழுத்துக்கொண்டு புறப் பட்டவேளை எமது வள்ளத்துக்கு குறுக்காக டோறா படகைச் செலுத்தி எம்மை மறித்ததோடு கையை மேலே தூக்குமாறு சொன்னார்கள். அதற்குப் பிறகு உங்களுக்கு சிங்களம் தெரி யுமா? என்று கேட்டார்கள். நாம் தெரி யாது என்று கூறியபோது, சைகை மூலம்மீனவர்களின் உடைமைகளையும், உணவு களையும்கொட்டிக் காட்டும் படிகூறினர். அவற்றையெல்லாம் கொட்டிகாட்டிய பின் கானில் இருந்த தண்ணீரை ஊற்றும்படிகூறினர் நீர் என சைகை மூலம் தெரியப்படுத்திய போதும் அச்சுறுத்தி அதனை ஊற்றும் படி கூறினர். நாம் உடனே அவற்றைக்கடலில் ஊற்றினோம். 35 லீற்றர் கொள்கலன் உள்ள வெளி இணைப்பு இயந்திரத்திற்குத் தேவையான பெற்றோல்கானை உயரத் தூக்கும்படி பணித்தபோது நாம் உயரத்தூக்கினோம் சுமார் 45 நிமிடம் மறித்து வைத்திருந்த பின்அவர்கள் கயிற்றை எடுத்து படகை தமது டோறா படகுக்கு கொண்டு வருமாறு கூறினர். நாம் அருகில் கொண்டு போனபோது கயிற்றினால் கட்ட எத்தனித்தபோது நாம் அழுதோம். அதன்பிறகு அவர் கள் போகும்படி கூறினார்கள். இச்சம்பவம் கரையிலிருந்து 15 கடல் மைல் தூரத்தில் நடைபெற்றது. எனக்கூறினர். (20)

## கிளிநொச்சி பொருண்மிய மதியுரையகத்தில் கட்டட நிலத்தெரிவு குறித்து ஆய்வுப்பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

கட்டடங்கள் அமைக்கின்ற நிலத்தின் மண் தொடர்பான ஆய்வுப்பட்டறை ஒன்று கிளிநொச்சி பொருண்மிய



மதியுரையகத்தில் நடைபெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை காலை 9.30 மணியளவில் கிளிநொச்சியிலுள்ள பொருண்மிய மதியுரையக பணிமனையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இதன் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை ஆய்வுப் பட்டறையினை மேற்கொள்ள வந்த அமெரிக்காவைச் சேர்ந்த பேராசிரியர் சித்தாத்தன் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினை விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தைச்சேர்ந்த செல்வி மதி ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து ஆய்வுப்பட்டறையை அமெரிக்க பேராசிரியர் சித்தாத்தன் நடாத்தினார். இதில் ஒரு கட்டடம் அமைக்கும்போது அதனுடைய அமைவிடம் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும், அந்த அமைவிடத்தின் மண் பற்றிய பூரணமான ஒரு ஆய்வினைச் செய்து அந்த மண்ணில் எவ்வாறான கட்டடங்களை அமைக்கலாம் என்றும் ஏற்கனவே அமைக்கப்பட்ட கட்டடங்கள் சேதமடைந்திருப்பின் அவற்றை எவ்வாறு மாற்றியமைக்கலாம் போன்ற பலவிடயங்கள் தொடர்பாகவும் விளக்கம் அளிக்கப்பட்டது.

இவ் ஆய்வுப் பட்டறையில் கிளிநொச்சியைச் சேர்நத 25இற்கும் மேற்பட்ட பொறியியலாளர்கள் பங்கு பற்றியுள்ளனர். (கு.தீ)






மாங்குளத்தில் கடந்த இருவருடங்களிற்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்ட காற்றாலை மின் உற்பத்தி திட்டம் இதுவரை நிறைவேற்றப்படாது கைவிடப்பட்டுள்ளதை படத்தில் காண்க. இவ் உற்பத்தி திட்டம் இலங்கை [illegible]வீட்டு சபையால் [illegible]ம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (படம்-கவியரசன்)

## புதுக்குடியிருப்பு நகர அபிவிருத்திக்கு அனைவரையும் ஒத்துழைக்க வேண்டுகை

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு நகர அபிவிருத்தி தொடர்பான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் காலை ஒன்பது மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பணிமனையில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ. தயானந்த தலைமையில் இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு வணிகர்களுக்கும், நில, கட்டட உரிமையாளர்களுக்குமான இக்கலந்துரையாடலில் புதுக்குடியிருப்பு நகரப் பகுதியிலுள்ள தொழில்சார் நிறுவனங்கள் யாவும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினதும், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினதும் அளவுப் பிரமாணத்திற்கு அமைவாக நகர்த்தப்பட வேண்டும் எனவும் இதற்கு கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானமானது ஓர் இறுதி முடிவு எனவும், பிரதேச செயலர் குறிப்பிட்டார். இத்தீர்மானத்தை அனைவரும் ஏற்று ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொண்டதுடன் இதற்கு ஒத்துழைப்பு வழங்காதோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் தமிழீழ நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில் பரந்தன், முல்லைத்தீவு வீதியின் எதிர்கால முக்கியத்துவம் குறித்தும், புதுக்குடியிருப்பு நகரத்தின் முக்கியத்துவம் குறித்தும் சட்ட நடவடிக்கைகள் குறித்தும் மிகவும் தெளிவாக எடுத்துக் கூறினார்.

மேலும், புதுக்குடியிருப்புப் பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன், தமிழீழ காவல்துறையின் புதுக்குடியிருப்புப் பணிமனைப் பொறுப்பாளர் கிருபாகரன் ஆகியோரும் உரையாற்றினர்.

இந்நிகழ்வில் கிராம சேவையாளர்கள், வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரான கனகரட்ணம், செயலர் சி. வேதவனம் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (08)

## காக்கை வலிப்பு நோய்க்கு சிக்ச்சை

(அலுவலக செயதியாளர்)

நோர்வே நாட்டிலிருந்து வருகை தந்துள்ள வைத்திய நிபுணர் சூசை அவர்களினால் கிளி.மாவட்ட வைத்தியசாலையில் வைத்து காக்கை வலிப்பு நோய்க்கான சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன. மேற்படி சிகிச்சைகள் எதிர்வரும் 12ஆம், 13ஆம், திகதிகளில் கிளி. மாவட்ட வைத்தியசாலையில் நடைபெறவுள்ளதால் சம்பந்தப்பட்ட நோய்த்தாக்கத்திற்குள்ளானவர்கள் மேற்குறிப்பிட்ட தினங்களில் சமுகம் கொடுத்து சிகிச்சையினை பெற்றுக் கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி சதானந்தன் வேண்டியுள்ளார். (சோ)

# மாவிட்டபுரம் ஆலய உற்சவத்திற்கு செல்வோர் மீது படையினர் பல்வேறு கெடுபிடிகள் விதிப்பு

-பொதுமக்கள் விசனம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்திற்கு செல்வோர் மீது சிறிலங்காப் படையினர் மிகவும் இறுக்கமான கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர். படையினரின் இந் நடவடிக்கை குறித்து பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

யாழ்.மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர் வரும் 11ஆம் திகதி ஆரம்பித்து அடுத்த மாதம் மூன்றாம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்த உற்சவத்திற்கு யாழ். குடா நாட்டிலிருந்து மட்டுமன்றி நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் அடியார்கள் வருகைதரவுள்ளனர்.

எனினும் மேற்படி ஆலயம் வலிகாமம் வடக்கு இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்துள் இருப்பதால் இவ் ஆலயத்துக்கு வருகைதரும் அடியார்கள் மீது பல்வேறு சோதனைக் கெடுபிடிகளையும் படையினர் விதித்துள்ளனர்.

குறிப்பாக இவ் ஆலயத்தில் இரவு விழா, பூசைகளை நடத்தக் கூடாது என்றும், ஆலயத்துக்கு படையினரால் மட்டுப்படுத்தப்பட்ட மார்க்கங்களினூடாக மட்டுமே அடியார்கள் வரமுடியும் என்றும் துவிச்சக்கர வண்டிகள் , உந்துருளிகளில் ஆலயத்திற்கு வரக்கூடாது என்றும் அவ்வாறு வருபவர்கள் பாதுகாப்பு வலயத்துள் உள்ள ஆலயத்துக்கு செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் விழாக்கால வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட எவருக்கும் அனுமதி கிடையாது என்றும், அனைத்துஅடியார்களும் கட்டாயம் ஆள் அடையாள அட்டைகளை எடுத்து வரவேண்டும் என்றும் படையினர் அறிவித்துள்ளனர்.

இது இயல்பான வழிபாட்டு நடவடிக்கைகளை பாதித்துள்ளது. (33)

# பண்டிதர் வீ.பரந்தாமனின் நூல் வெளியீட்டுவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

பண்டிதர் வீ.பரந்தாமனின் வேர்-அடிவழித்தமிழ்ச் சொற்பிறப்பியற் சிற்றகரமுதலி நூல் வெளியீட்டு விழா இன்று இடம்பெறுகின்றது.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காலை 9.00 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சி.சிவலிங்கராஜா தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும்.

இந் நூலின் வெளியீட்டுரையினை யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நிகழ்த்துவார்.

அறிமுகவுரையை முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் நிகழ்த்துவார்.

மதிப்பீட்டுரைகளை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதுநிலை விரிவுரையாளர் முனைவர் செல்லையா திருநாவுக்கரசு மற்றும் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் நிகழ்த்துவார்.

# குருநகர் பகுதியில் படையினரால் 336 பொதுமக்களின் வீடுகள் ஆக்கிரமிப்பு

(குருநகர்)

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் யாழ்.குருநகர் பிரதேசத்தில் 336 வீடுகளை சிறிலங்காப்படையினர் ஆக்கிரமித்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த உயர்பாதுகாப்புவலயப் பகுதி மக்கள் உறவினர்கள் வீட்டிலும், உறவினர் அல்லாதோரின் வீட்டிலும் தங்கி வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறு பல வருடங்களாக வேறு வீடுகளில் தங்கி வாழ்ந்து வருவதனால் அவர்கள் நடைமுறையில் பலபிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வீடுகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரால் நாளாந்தம் கெடுபிடிகள் அதிகரிக்கின்றன தொழில்புரிவதற்கு கடலுக்குச் செல்வதற்கு பாஸ் நடைமுறை இருப்பதனால் தொழில் செய்ய முடியாதுள்ளது. இதனால் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடைந்து செல்கின்றது என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குடாநாட்டில் இதேபோன்று பல பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் விவசாய விளை நிலங்கள், குடியிருப்பு இடங்கள் பாடசாலைகள், பொதுஇடங்கள், வர்த்தக நிலையங்கள் போன்றவற்றை ஆக்கிரமித்து இருப்பதால் சொந்த இடங்களில் சுயமாகத் தொழில் செய்து சுதந்திரமாகவாழமுடியாத துர்ப்பாக்கிய நிலையை சிறிலங்கா இராணுவத்தினர் ஏற்படுத்தியுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (கீ)

# யுத்தம் எம்மீது திணிக்கப்படுமாயின் நாம் பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம்

**-கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம்**

(வடமராட்சி)

நாம் யுத்தங்களையோ, சத்தங்களையோ விரும்புபவர்கள் அல்ல. ஆனால் யுத்தமும், சத்தமும் எம்மீது வலிந்து திணிக்கப்படுமாயின் நாம் பார்த்துக்கொண்டிருக்கமாட்டோம். கடலா? தரையா? எந்த ரீதியிலும் நாம் எதிரிக்குப் பலத்த அடியைக் கொடுக்கத் தயாராகவே இருக்கின்றோம். எம்மக்கள் இன்புற்று வாழ வேண்டும் என்பதற்காக தம்முயிரையும், உடலையும் தந்த கரும்புலிகளின் நினைவுநாளில் இந்த இறுக்கமான முடிவைச் சொல்லி வைக்க விரும்புகிறோம். இவ்வாறு கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான விநாயகம் நெல்லியடி மத்தியமகாவித்தியா லயத்தில் நடைபெற்ற கரும்புலிகள் தின நினைவுரைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்; சமாதானம் என்று சொல்லப்படுகின்ற இந்த மூன்றாண்டுகளில் தமிழ்மக்களுக்கு நிரந்தரத்தீர்வு கிடைக்க விடாது இழுத்தடித்து வரும் நிலையில் தொடர்ந்து எமது போராளிகளை அழிக்கும் செயல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

அண்மையில் கிழக்கிற்கு கண்காணிப்புக்குழு வழித் துணையுடனேயே சென்ற எமது போராளிகள் மீது படையினரால் கண்ணிவெடித் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால்நாம்50 போராளிகளை இழந்திருப்போமேயானால் இந்த இடத்திலிருந்து பேசிக் கொண்டிருக்க முடியாது. இதுதான் வழித்துணை என்பதை நீங்களே அறிந்து கொள்ளுங்கள். இதனைவிட தமிழர்தாயகத்தின் தலைநகரில் புத்தர்சிலை வைக்கப்பட்டு அங்கு என்னவோ எல்லாம் நடைபெறுகிறது.

அரசு நேர்மையாக தற்துணிவுடன் நேரடியாக எம்மை யுத்தத்துக்கு அழைத்தால் நாமும் தயாராவோம். ஆனால் எம் போராளிகளை கொல்லுமளவிற்குப் பொறுமைகாத்துக் கொண்டிருக்க முடியாது.

எமது விடுதலைப்போராட்டம் இறுக்கமான நெருக்கடியான காலகட்டத்தில் தடைநீக்கிகளாய் கடல், தரை என்றாலும் சரி காற்றுப்புக முடியாத இடங்களெல்லாம் சென்று எதிரியின் கோட்டைகளை துகள் துகளாக்கி வீரசாதனை படைத்தவர்கள். துல்லியமான நகர்வுகளின் மூலம் விடுதலைப் போராட்டத்திற்கு வழிகாட்டியவர்கள் இந்தக் கரும்புலிகள். நாம் முறியடித்த வெற்றிச் சமர்களில் முக்கிய பங்கு கரும்புலிகளையே சாரும்.

யுத்தத்தை எதிர் கொள்ளுமாறு நாம் தூண்டப்படுகின்றோம். யுத்தமா? சமாதானமா? எதனையும் எதிர்கொள்ள தமிழ்மக்கள் அனைவரும் தலைவரின் கரங்களை இறுகப்பற்றிக் கொள்ள வேண்டும் எனத்தெரிவித்தார். (கா)

# மிதிவெடி அகற்றிய பகுதிகளில் மீண்டும் பயிர்செய்கை ஆரம்பம்

(கோப்பாய்)

யாழ்.கோப்பாய் மற்றும்சிறுப்பிட்டி பகுதிகளிலுள்ள மிதிவெடிகள் அகற்றப்பட்ட விவசாய நிலங்களில் அப்பகுதி விவசாயிகள் மீண்டும் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி பகுதிகளிலுள்ள பல ஏக்கர் காணிகளுள் சிறிலங்கா படையினரால்மிதிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருந்ததால் அப்பகுதி விவசாயிகள் பலரும் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது தொழில் ரீதியாகப் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந் நிலைமைகளை கவனத்தில் கொண்டு மிதிவெடிஅகற்றும் அமைப்பினரால் அப்பகுதியிலிருந்து மிதிவெடிகள் அகற்றப்பட்டு அண்மையில் பொதுமக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டிருந்தன.

இதனைத் தொடர்ந்து அந் நிலங்களில் பயிரிடும் நடவடிக்கைகளை விவசாயிகள் ஆரம்பித்துள்ளனர். (33)

# மின்சாரம் தடை

யாழ்.நகரில் அண்மைக்காலமாக அடிக்கடி மின்சாரம் தடைப்பட ஆரம்பித்துள்ளது. எந்தவித முன்னறிவிப்புக்களும் இன்றி பலதடவைகள் மின்சாரம் தடைப்படுகின்றது.

இரவுபகல் என்ற வேறுபாடுகள் இன்றி இவ்வாறு மின்சாரம் தடைப்படுவதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கியுள்ளனர். (சு)

# சமரசம் செய்ய முயன்றவர் வாள்வெட்டுக்கு இலக்கானர்

- சுழிபுரத்தில் சம்பவம் -

(அலுவலக செய்தியாளர்)

சுழிபுரத்தில் ஏற்பட்ட கைகலப்பு வாள்வெட்டில் முடிவடைந்தது. இதனால் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இருவருக்கிடையே ஏற்பட்ட கருத்துவேறுபாடு வாய்ச்சண்டையில் ஆரம்பித்து கைகலப்பு வாள்வெட்டுவரை சென்றது. இதில் இரு பகுதியினரையும் சமரசம் செய்யமுயன்றவர் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார். சுழிபுரத்தைச்சேர்ந்த நாகலிங்கம் செல்லையா (வயது-40) என்றகுடும்பஸ்தரே படுகாயமடைந்துள்ளார். (சு)

# குடாநாட்டில் ஆழிப்பேரலைதாக்கத்தால் 21,811 குடும்பங்களுக்கு பொருளாதாரப் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் 21,811 குடும்பங்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக சுனாமி அனர்த்த நிவாரண ஒருங்கிணைப்பு செயலணி தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுனாமி ஆழிப்பேரனர்த்தம் காரணமாக யாழ்.குடாநாட்டைச் சேர்ந்த 6811 குடும்பங்கள்நேரடியான பொருளாதாரப்பாதிப்புகளை எதிர் கொண்டிருக்கின்றன.

இதைவிட 15000 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மறை முகமான பொருளாதாரப் பாதிப்புகளை எதிர் கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப் படுகிறது.

நேரடியான பொருளாதாரம் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ள குடும்பங்களில் அதிகளவானவை கடற்றொழிலாளர்களின் குடும்பங்களாக இருப்பதாகவும்தெரியவருகிறது.

எனவே இவ்வாறு பொருளாதாரப் பாதிப்புகளை நேரடியாகச் சந்தித்துள்ள குடும்பங்களினதும் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உடன் எடுக்கப் படுவது அவசியம்எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (33)

# வடமராட்சியில் சுனாமியால் உயிரிழந்த 325 குடும்பங்களுக்கு இதுவரை இழப்பீடு இல்லை

(வடமராட்சி)

சுனாமி அனர்த்தத்தில் உயிரிழந்தோருக்காக அரசினால் வழங்கப்பட்ட இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் கூட இன்னமும் யாழ். வடமராட்சி மக்களுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை எனத்தெரியவருகிறது.

அந்தவகையில் சுனாமி அனர்த்தம் காரணமாக யாழ். வடமராட்சியில் 2514 பேர் உயிரிழந்துள்ளனர்.இவ் இழப்புகளால் பாதிக்கப்பட்ட 325 குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இன்னமும் உயிரிழப்பீட்டுக்கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இதனால் இக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருப்பதால் இவர்களுக்கான கொடுப்பனவுகளை உடன் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி கடற்றொழிலாளர்கள் சங்கத்தினர் யாழ். அரசஅதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (33)

# பாதிக்கப்பட்டோருக்கு 'யுனிசெப்' உதவி

யாழ்.வலிகாமம் தெற்குப் பிரதேச செயலர் பிரிவில் 30 மலசல கூடங்களையும், இரண்டு பொதுக்கிணறுகளையும் அமைத்துக்கொடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (யுனிசெப்) முன்வந்துள்ளது.

இவை யுத்தத்தால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்த பெண் தலைமைத்துவம் உள்ள குடும்பங்கள் மற்றும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்கள் ஆகியவற்றிக்கு அமைத்துக்கொடுக்கப்படவுள்ளன. இதற்கான பயனாளிகள் தெரிவு கிராம சேவையாளர்களூடாக இடம்பெற்று வருகின்றன. (33)

# சலரோக நோயாளிக்கான உணவு பற்றிய ஆலோசனைகள்

## அறிவுறுத்தல்கள்

சலரோக நோயாளிகளின் சிகிச்சையில் உணவுக்கட்டுப்பாடு மிக முக்கிய பங்காற்றுகிறது. இக்குறிப்பேட்டிலுள்ள ஆலோசனைப் படியே உணவைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இக்குறிப்பேடு பலவிதமான மாற்று உணவு வகைகளைக் கொண்டுள்ளது. அதிலிருந்து உங்கள் இரசனைக்கேற்ப உணவுப் பதார்த் தங்களைத்தேர்ந்தெடுக்க முடியும். ஆனால் அவ்வாறு தேர்ந்தெடுக்கும் போது அடிப்படை உணவின் அளவுகளை மாற்ற முற்படக்கூடாது.

## பிற்குறிப்பு

ஒரு தம்ளர் கப் 200 மி.லீ கொள்ளளவு உடையது. இவற்றைக் கொண்டு உணவின் அளவை நிர்ணயிக்கலாம்.

நார்ப்பொருட்கள் அதிகம் உள்ள உணப் பொருட்களை உட்கொள்ளல் நன்று. (தீட்டாத தானியம், அவரைவகை, மரக்கறி, பழவகை என்பவற்றில் போதிய அளவு நார்ப்பொருட்கள் உண்டு).

பால்- கொழுப்பு நீக்கியது.

மரக்கறி 1 எனக் குறிப்பிடப்பட்ட உணவு வகைகளில் ஏதாவது ஒன்றை விரும்பிய அளவு உண்ணலாம்.

மரக்கறி 2 எனக் குறிப்பிடப்பட்ட உணவு வகைகளில் ஏதாவது ஒன்றை அரை கப் மட்டும் உண்ணலாம்.

## சலரோக நோயாளிக்கான உணவு(1500 Kcal)

**காலை உணவு**

பால் அரை கப் (சீனி சேர்க்காது தேனீர் அல்லது கோப்பியுடன்)

தானியவகை (50g) பின்வருவனவற்றில் ஏதாவது ஒன்று.

தோசை அல்லது இட்லி-2
இடியப்பம் -3
பிட்டு -2
பாண் -$^1/_4$ இறா
உப்புமா - 1 கப்

பின் காலை
கதலி வாழைப்பழம்-1

**மதிய உணவு**

சோறு (75g) - 1 $^1/_2$ கப்
அசைவம் - மீன் 2 துண்டு.
இறைச்சி -$/_2$ கப்
-முட்டை 1
பருப்பு -$^1/_2$ கப்
தயிர் -$^1/_2$ கப்
மரக்கறி1 - விரும்பிய அளவில் உண்ணக்கூடியவை.
மரக்கறி2 -$^1/_2$ கப் மட்டும் உண்ணக்கூடியவை

**தேனீர் வேளை**

பால் $^1/_2$ கப் (சீனி சேர்க்காது தேனீர் அல்லது கோப்பியுடன்)
2 கிறீம் கிறக்கர் அல்லது $^1/_4$ கப் சுண்டல்.

**இரவு உணவு**

தானியவகை, இடியப்பம், பிட்டு, பாண், உப்புமா,(மேற்கூறிய அளவுகளில்) கறிவகை மதிய உணவைப் போல்.

**படுக்கை நேரம்.**

பால் 1 கப் (சீனி சேர்க்காதது)
வாழைப்பழத்திற்குப் பதிலாக உண்ணக் கூடிய பழவகை.
ஜம்பு 20 (சிறியது)-விளாம்பழம் 1
கொய்யா1, புளித்தோடை-1 (நடுத்தரம்)
பப்பாளிப்பழம் 2"x3" துண்டு 1

**மரக்கறி-1**

கோவா- காய்ப்பப்பாசி-வெந்தயம்
சிறுகீரை-பாகற்காய்- கத்தரி
தக்காளி-போஞ்சி- புடலங்காய்
வாழைப்பூ மிளகாய்-வெண்டைக்காய்

**மரக்கறி-2**

அகத்தி-பீற்றூட் (பச்சையாக)
முருங்கைக்காய்-கரட் (பச்சையாக)
முருங்கை இலை- வெங்காயம்.

**விரும்பிய அளவில் உண்ணக்கூடியவை**

தெளிந்த சூப்-தக்காளி
எலுமிச்சை-கோவா
மரக்கறி-சீனி சேர்க்காத தேனீ, அல்லது கோப்பி
பலசரக்கு வகை-அச்சாறு.

**முற்று முழுதாக தவிர்க்க வேண்டியவை**

சீனி குளுக்கோஸ்
சர்க்கரை பனங்கட்டி
ஜாம் பழரசம்
தேன் இனிப்பூட்டிய பானம்
கேக் ஹோர்லிக்ஸ்
சொக்கலேற் வீவா
இனிப்புவகை நெஸ்ரமோல்ற்
குளிர்பானம், புரோட்டினெக்ஸ், மைலோ.

## சலரோக நோயாளி கவனத்தில் கொள்ள வேண்டியது

1.உணவுக் கட்டுப்பாடு மிக அவசியம்.
2. தவறாது மாதாந்த வைத்திய பரிசோதனைக்குச் செல்ல வேண்டும்.
3.காயங்கள் ஏற்படுவதைக் கூடிய அளவில் தவிர்க்க வேண்டும்.
4.கால்நகங்களை வெட்டி சுத்தமாக வைத்திருப்பதுடன் வெளியே செல்லும் போது பாதணி அணிய வேண்டும்.

காயங்கள் ஏற்படும் பட்சத்தில் உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும்.

வைத்தியக் குறிப்புப் புத்தகத்தை எப்போதும் தன்னுடன் வைத்திருக்க வேண்டும்.

மருந்துக் குளிகை, ஊசி போன்றவற்றை வைத்தியர் கூறியபடி ஒழுங்காக எடுக்க வேண்டும்.

வைத்தியரின் ஆலோசனையின்றி மருந்தின் அளவைக் கூட்டவோ குறைக்கவோ முயலக் கூடாது.

**இரத்தத்தில் சீனிச்சத்துக் குறையும்போது ஏற்படும் அறிகுறிகள்.**

படபடப்பு
அதிக சோர்வு
தலைச்சுற்று, மயக்கம்
தலையிடி
அதிக வியர்வை
வலிப்பு

நோயாளி அல்லது அருகில் இருப்பவர் இவ்வறிகுறிகளைக் கண்டதும் நோயாளியின் வாயில் குளுக்கோஸ் அல்லது சீனியை இடவேண்டும். பின வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

நோயாளி எப்போதும் தன்னுடன் குளுக்கோஸ் வைத்திருப்பது நன்று.

கிளி. மருத்துவச் சங்கம்
மாவட்ட வைத்தியசாலை
கிளிநொச்சி

# விபத்துக்களைத் தடுக்க...

ஒரு காலத்தில் சொகுசு பாவனைக்காக மட்டும் எனக் கருதப்பட்ட வாகனத் தேவை. தற்போது மிகவும் அத்தியாவசியமானதாக மாறிவிட்டது.

அதற்கமைய தற்போது உலகில் வாகன உற்பத்திகளும்பயன்பாடுகளும் அதிகரித்துள்ளன. உற்பத்திகளைப் பொறுத்தவரை நாளுக்குநாள் வடிவமைப்பிலும் தரத்திலும் விருத்தியடைந்த நவீனரக வாகனங்கள் தயாரித்து அறிமுகப்படுத்தப்படுகின்றன.

எவ்வாறேனும் இவை மனிதனுக்கு எவ்வேளையிலும் ஆபத்துக்களைத் தருவனவாகவே காணப்படுகின்றன. அளவுக்கதிகமானவேகம், வாகன நெரிசல் என்பவையே இந்த ஆபத்துக்களுக்குக்காரணமாகின்றன.

இவற்றைத்தவிர்க்கும் பொருட்டு தற்போது அதிவேக வாகனங்களில் பொருத்தப்படக்கூடிய எச்சரிக்கைக் கருவிகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

அதன்படி வால்வோ உற்பத்தி நிறுவனம் வாகனங்களில் இரு பக்கங்களிலுமுள்ள நிழற்கண்ணாடியில் பொருத்தக் கூடிய புகைப்படக் கருவியை அறிமுகம் செய்துள்ளது.. சிலவேளைகளில் அருகில் வரும் வாகனம் மேற்படி கண்ணாடி விம்பத்தில் விழத்தவறும் பட்சத்தில்அது தொடர்பான சமிக்ஞையை ஒளியின் மூலமும் சாரதிக்கு அறிவிப்பதே மேற்படி (கமரா) புகைப்படக்கருவியின் பணியாகும்.

சில வீதிகளில் வீதி விதிமுறைகள் குறிப்பிடப்பட்டு அது முடிவடையும் இடத்தை அறிவிக்கும் கமராக்களும் வாகனத்தில் பொருத்தப்படும். இந்த விதிமுறைகளைக் கடந்த பின் சாரதி தனது வேகத்தை அதிகரிக்கலாம்.


அடுத்து முக்கிய உபகரணமான தடுப்பு (brake) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சாரதியொருவர் அதிக வேகத்துடன் வாகனத்தை செத்தும்போது 13 I.B.A எனப்படும் கண்காணிப்புக்கருவி மூலம் தடுப்பு பிரயோகிக்கப்பட வேண்டிய அவசியத்தை அறிவிக்கும் சிலவேளை சாரதி கட்டுப்பாட்டை மீறும் பட்சத்தில் தானியங்கி தடுப்பு விரைவில் செயற்பட்டு வாகனத்தை நிறுத்தும். இந்த உதிரிப்பாகம் 2006 ஆம் ஆண்டு மர்சிடஸ் பென்ஸ் உற்பத்தி நிறுவனம் அறிமுகம் செய்யும்.

அடுத்தாக வாகனம் வேறொரு பொருளுடன் அல்லது வாகனத்துடன் மோதி விபத்து நடைபெறும் போது அந்தப் பாதிப்பிலிருந்து பாதுகாக்க பல வடிவங்களில் அமைந்த வாயு நிரப்பப்பட்ட பலூன்கள் பொருத்தப்படவுள்ளது. இது நபரின் உடல் அமைப்புக்கு ஏற்ற வகையில் (உயரம், பருமன்) அமையும். அத்துடன் வாகனம் ஒன்றின் முன்பகுதியில் ரடார் போன்ற கருவியும் பொருத்தப்படவிருக்கிறது. இதன் மூலம்நிகழவிருக்கும் அனர்த்தத்தை சாரதி முன்கூட்டியே அறிந்துகொள்ள முடியும். இதனையடுத்து சாரதி உடனடியாகத் தடுப்பை (brake) பிரயோகிக்கவும். ஆசனத்தின் நாடாவை சரிவர இணைத்துக்கொள்ளவும். மேற்படி பலூனைப் பயன்படுத்தவும். அவகாசம் கிடைக்கும்.

இவற்றைவிட வாகனநெரிசல் மற்றும் வீதி விதிமுறைகளுக்கேற்ப வாகனத்தை திருப்பக் கூடிய வகையில் அதனை தானாக அறிந்துசெயற்படக்கூடிய தானியங்கி திருப்பி (steering) பொருத்தப்படவிருக்கிறது. சிலவெளைகளில் வாகனம் தடம் புரள்வதைத் தடுக்கும் விதத்தில் வாகனத்தின் நான்கு சில்லுகளும் சுமையைச் சமமாகப் பகிர்ந்தளிக்கும் கருவி யொன்றும் பொருத்தப்படவுள்ளது.

இவ்வாறான உதிரிப்பாகங்கள் பொருத்தப்படவிருப்பதால் அதிகளவு விபத்துக்களைத் தடுக்க முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது.

# ஞாபகசக்திக்கு மாத்திரைகள்!



ஞாபக சக்தியை அதிகரிக்கும் மாத்திரைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அமெரிக்க விஞ்ஞானிகள் இந்த நினைவாற்றல் மாத்திரையைக் கண்டு பிடித்துள்ளனர். CX717 என்ற இம்மாத்திரை மூளையின் இரசாயனப் பதார்த் தங்களைத் தூண்டுவதன் மூலம் நினைவாற்றலை அதிகரிக்கிறது. இம் மாத்திரையை 16 மந்த சிந்தனை உடையவர்களிற்கு வழங்கி அவர்களின் ஞாபக சக்தியில் விவேகத்தன்மை அதிகரித்துள்ளமையை உறுதி செய்துள்ளனர். கலிபோனியாப் பல்லைக்கழக டாக்டர் இது பற்றிக் கூறுகையில்; அது ஞாபகசக்தி குறைந்த மந்தமான சிந்தனையுடைய, புத்திசுவாதீனத்தன்மையுடைய நோயாளிகளின் நினைவாற்றலை அதிகரிக்க, மீள் நினைவூட்டலை ஏற்படுத்தப் பயன்படுத்தலாம் எனக் கூறினார்.

மேலும் பல பரிசோதனைகளை நடத்திய பின்னரே இம்மாத்திரை விற்பனைக்கு வரும் எனவும் அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.

# பூனையின் கண்கள்...



பூனையின் கண்கள் இருளில் பார்க்கும் வண்ணம் சிறப்பாக அமைந்துள்ளன. அதன் விழிகள் வட்டவடிவிலும், பெரிய அளவிலும் உள்ளன. அதனால் அதிக வெளிச்சம் உள்ளே வரும். மேலும் அதன் கண்களின் பின் புறத்தில் பிரதி பலிக்கும் பகுதியும் உள்ளது. அதனால் அது வெளிச்சத்தைப் பிரதிபலிக் கின்றது.

இதன் மூலம் அது ஒரு டோர்ச் போல செயற்படுகின்றது.

மேலும் இதன் விழிகளில் ராட் அணுக் கள் உள்ளன. இவை மங்கிய ஒளியில் செயற்படும் அளவுக்கு சிறப்புத்தன்மை கொண்டவை. இதன் மூலம் இரவிலும் அவற்றுக்குக் கண்கள் நன்றாகத் தெரியும். இதனால் இருட்டிலும் அவை வேட்டையாடுகின்றன.




இலங்கையில் கடந்த மூன்று வருடங்களாக வாழ்ந்துவரும் வெளிநாட்டவர் ஒருவரின் உடலில் 15 அடி நீள மான நாடாப்புழு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 30 வயதினையுடைய இவ் வெளிநாட் டவர் கடந்த ஆறு வருடங்களாக இந்நாடாப்புழு நோய்த்தாக்கத்தினால் பீடிக்கப்பட்டிருந்தார். நாட்டின் மருத்துவவரலாற்றிலேயே கண்டு பிடிக்கப்பட்ட மிக நீண்ட நாடாப்புழு இதுவே என ஒட்டுண்ணி ஆய்வுத் திணைக்களப் பிரதம வைத்தியர் சகாறிகா சமரசிங்க நேற்று முன்தினம் தெரிவித்தார்.




உலகில் யானைகள் அருகிவருவதையடுத்து மரபணு மூலம் அவற்றை இனப்பெருக்கம் செய்யும் நோக்கில் முதன்முதலாக யானைகளைப் பரிசோதனை செய்யும் நிகழ்வு நடைபெற்றுள்ளது. இது இத்தாலியிலுள்ள முக்கிய பகுதியொன்றில் நடத்தப்பட்டுள்ளது.

# 'பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்' கனடாவில் வெளியீடு



கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'பூவரசம்வேலியும், புலுனிக்குஞ்சுகளும்' கவிதை நூல்வெளியீடு கடந்த மூன்றாம் திகதி கனடா றொரன்ரோவில் மாலை 6-30 மணியளவில் ஆரம்பமானது. இதில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் உலகத் தமிழர் கலை பண்பாட்டுத் தலைவர் சிவமோகன் தொடக்க உரையாற்றினார்.

இதனைத் தொடர்ந்து கவிஞர் இன்குலாப்பினதும், கவிஞர் அறிவுமதியினதும் வாழ்த்துச் செய்தியினை வனிதா இராஜேந்தரம் வாசித்தார். இங்குள்ள கலைஞர்களால் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் சில பாடல்கள் பாடப்பட்டன. இதனைத் தொடர்ந்து விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் தொல்திருமாவளவன் சிறப்புரையாற்றினார். மற்றும் பொன்னையா விவேகானந்தன், வர்ணராமேஸ்வரன், பொ.ஜங்கர நேசனும் உரையாற்றினார்கள்.




படங்கள்:-எழிலன்

இதில் விமல்செக்கநாதனும் கலந்து கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதன் பின் கவிதை நூல் வெளியீடு இடம்பெற்றது.

# பிரதான வீதிகளுக்கு கிரவல் போடப்பட்டதால் உருவாகியுள்ள நெருக்கடிகளைத் தீர்க்க வலியுறுத்து

(அலுவலக செய்தியாளர்)

வர்த்தக நிலையங்கள் அதிகளவில் காணப்படும் முழங்காவில், ஜெயபுரம் சந்திப்பகுதிகளை ஊடறுத்துச்செல்லும் பிரதான வீதிகள் தார் ஊற்றி செப்பனிடப்படா நிலை தொடர்வதால் தாம் பெரும் சுகாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாக அப்பகுதி வர்த்தகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.



முழங்காவில் நகரப்பகுதி மற்றும் ஜெயபுரம் நகரப்பகுதிகள் வர்த்தக நிலையங்கள்அதிகளவில் நிறைந்திருக்கின்ற பகுதிகள் அத்துடன் அதிகளவான மக்கள் நடமாட்டம் நிறைந்த பகுதியுமாகும். இந்தப் பிரதேசங்களிலுள்ள வீதிகள் எவையும் சீரான முறையில் புனரமைப்புச் செய்யப்படுவதில்லை. நீண்ட நாட்களுக்குப் பின்னர் தான் கிரவல் போடப்பட்டு வீதி செப்பனிடப்படுகிறது.

அவ்வாறு செப்பனிடப்படுகின்ற வீதிகளில் இருந்து எழுகின்ற புழுதி தேநீர்ச்சாலைகள் மற்றும் பல்பொருள் வாணிபங்களினுள் புகுவதால் தாம் சுகாதார நடைமுறைகளை கடைப்பிடித்து செயற்பட முடியாமலுள்ளது எனவும் சில சமயங்களில் உணவுப் பொருட்கள் சிலவற்றை அகற்ற வேண்டி நிலை தோன்றுவதாகவும் தெரிவித்தனர்.

இதேபோல புடைவை வர்த்தகர்கள் தெரிவிக்கையில் தாம் புடைவை வகைகளை வாடிக்கையாளர் பார்வைக்கு ஏற்ற வகையிலும் விற்பனை செய்வதற்கு ஏற்றவகையிலும், வர்த்தக நிலையங்களில் வைக்க முடியாத நிலை தோன்றியிருப்பதாகவும் தெரிவித்தனர். சிலசமயங்களில் புதிய ஆடைகளை சலவைசெய்து விற்பனை செய்ய வேண்டிய நிலை கூட தோன்றுகிறது எனவும் தெரிவித்தனர்.

இந்தநிலையில் முழுவீதிகளுக்கும் தார் ஊற்றித்தராவிட்டாலும் முக்கிய சந்திகளுக்காவது தார் ஊற்றித் தந்து தமக்கு ஏற்படுகின்ற பெரும் நஷ்டத்தையும் சுகாதாரப் பிரச்சினைகளையும் தீர்த்து ஆரோக்கியமான வியாபாரத்தை மேற்கொள்வதற்கான வழிவகைகளை மேற்கொண்டு தருமாறும் அப்பகுதி மக்களும் வர்த்தகர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (லோ)

# அபிவிருத்திச் சங்கங்களின் நிர்வாகிகள் தெரிவு

துணுக்காய் பிரதேச யோகபுரம் மத்தி கிராமத்தின் கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும் புதிய நிர்வாகக்குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவராக த.சுந்தரலிங்கம், செயலாளராக தா.இராமலிங்கம், உப தலைவராக வி.சிவஞானசுந்தரம், உபசெயலாளராக வி.ஜெகநாதன், பொருளாளராக மு.குணசிங்கம் ஆகியோருடன் எட்டு நிர்வாகிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

மாதர் கிராம அபிவிருத்தி சங்கத் தெரிவில் தலைவியாக திருமதி க.தவமணிதேவி, உபதலைவியாக திருமதி. யோ.மகேஸ்வரி, செயலாளராக திருமதி கா.அரசமலர், உப செயலாளராக திருமதி சி.கோகிலா, பொருளாளராக திருமதி கெ.சத்தியகுமாரி ஆகியோருடன் ஏழு உறுப்பினர் தெரிவுகளும் இடம்பெற்று போஷகராக பா.நவரத்தினம் (கிராமஅலுவர்) தெரிவு செய்யப்பட்டார். (24)

## பழமரக்கன்று வழங்கல்

முள்ளியவளைப் பிரதேசத்தின் கரும்புலிகள் தினத்தன்று பிலக்குடியிருப்புத்திட்டத்தில் மக்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், முள்ளியவளை கமநல சேவை நிலையமும் இணைந்து தென்னை நாற்று, பழமரக்கன்றுகள் என்பன வழங்கின. முள்ளியவளைப்பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் றொபேட் தலைமையில் இது -நடைபெற்றது. இதில் முள்ளியவளைப் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் முல்லைவீரன் கருத்துரை வழங்கினார். (05,ஆ)

## இன்று விஞ்ஞானதினம்

கிளிநொச்சி மத்தியகல்லூரியில் நடைபெறவிருந்த இலங்கை விஞ்ஞான முன்னேற்றச்சங்கத்தின் விஞ்ஞான தினம்இன்று காலை 9 மணிக்கு கிளி/கிளிநொச்சி ம.வி.யில் நடைபெறவுள்ளது.

## கமக்கார அமைப்புத் தெரிவு

மாங்குளம் பிரதேசத்தின் கமக்கார அமைப்புக்களின் புதிய தெரிவுகளும், மீள புனரமைப்பும் நடைபெறவுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும், கமநலசேவையினரும் இணைந்துநடாத்தும் கலந்துரையாடலில் ஒலு மடு கமநல பெரும்பாக உத்தியோகத்தர் செல்வி இராசலட்சுமி தலை மையில் எதிர்வரும் 11 ஆம்திகதி காலை 10.00 மணிக்கு கரிப்பட்ட முறிப்பு அ.த.க.பாடசாலையில் ஒன்பது மீளபுனரமைப்புத் தெரிவுநடைபெறவுள்ளது. 14.05. 2005 ஒலுமடு, பனிக்கன்குளம் ஆகிய இடங்களிலும் நடைபெறவுள்ளது. (05)

# ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய்க்காக இன்று தடை ஊசி மருந்தேற்றல்

யாழ்ப்பாணம் பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்கு உட்பட்ட நிலையங்களில் ஜப்பானிய மூளைக்காய்ச்சல் நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து கீழ்வரும் இடங்களில் காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 4.00 மணி வரை ஒரு வயதுதொடக்கம் பத்து வயதுக்குட்பட்ட சகல குழந்தைகளுக்கும் இரண்டு சுற்றுக்களில் வழங்கப்படவிருக்கின்றன. முதல் சுற்று இன்று சனிக்கிழமையும், இரண்டாம் சுற்று யூலை 23 திகதி சனிக்கிழமையும் வழங்கப்படும் என யாழ்.மாவட்ட பிரதிமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

*சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனை–சாவகச்சேரி*

நாவற்குழி-கு.சு.சே.உ பணிமனை தச்சன் தோப்பு கி.நிலையம், கைதடி வடக்கு-அம்பிகை மாதர் சங்கம், கைதடி தெற்கு-மத்தியமருந்தகம் கைதடி, மட்டுவில் வடக்கு-வேற்பிள்ளை வாசிகசாலை, மட்டுவில் தெற்கு-ஆரம்பசுகாதார நிலையம், சரசாலை-கிராமோதய நிலையம், மந்துவில்-ஆரம்பசுகாதார நிலையம், நுணாவில்-பொதுநூலகம், கல்வயல்-கு.சு.சே.உ. அலுவலகம், நகரசபை-சுகாதார வைத்திய அதிகாரிபணிமனை, சங்கத்தானை-சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கச்சாய்-ஆரம்பசுகாதார நிலையம் அல்லாரை வெள்ளாம்போக்கட்டி, மீசாலைவடக்கு-புத்தூர்ச் சந்தி, கொடிகாமம்-கச்சாய் கிராமோதய நிலையம், உசன்-ஆரம்பசுகாதார நிலையம் தவசிகுளம் பகல் பராமரிப்பு நிலையம், மிருசுவில்-ம.ம.ம.ம. கொடிகாமம், வரணி தெற்கு-குடமியன் வாசிகசாலை, வரணி வடக்கு-ம.ம.ம.ம.வரணி, வரணிமத்தி-ம.ம.ம.ம. வரணி,

*சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனை–தெல்லிப்பழை*

ம.ம.ம.ம அளவெட்டி-பன்னாலை, அளவெட்டி-அளவெட்டித்தெற்கு, மா.வை.தெல்லிப்பழை-தெல்லிப்பழை, மல்லாகம்-மல்லாகம் மத்தி மல்லாகம் வடக்கு, மத்திய மருந்தகம்-ஏழாலை தெற்கு, ஏழாலை தெற்கு -ஏழாலை வடக்கு, மத்தியமருந்தகம், புன்னாலைக்கட்டுவன் -வசாவிளான், வசாவிளான்-குப்பிளான், இளவாலை-புன்னாலைக்கட்டுவன், மத்திய மருந்தகம்-சுன்னாகம்தெற்கு, சுன்னாகம்-சுன்னாகம் வடக்கு, கந்தரோடை-கந்தரோடை, தாவடி ஆரம்பசுகாதார நிலையம்-தாவடி, மத்தியமருந்தகம் இணுவில்-இணுவில்வடக்கு, தாவடி-இணுவில் தெற்கு, மத்தியமருந்தகம் உடுவில்-உடுவில் தெற்கு, மல்வம்-உடுவில் வடக்கு, ஆரம்பசுகாதார நிலையம் சுன்னாகம்-உடுவில்,

*சுகாதார வைத்திய அதிகாரிபணிமனை–பருத்தித்துறை*

கற்கோளம்-கற்கோளம் மதானை, பருத்தித்துறை-கிழக்கு-4 ஆம்குறுக்குத்தெரு, பருத்தித்துறை மேற்கு-சிகிச்சை நிலையம், புலோலி மேற்கு-கதிரவேற்பிள்ளை வாசிகசாலை, அல்வாய்வடக்கு-ஆரம்பசுகாதார நிலையம் வியாபாரிமூலை, வல்வெட்டித்துறை-மாவட்டவைத்தியசாலை வல்வெட்டித்துறை, கம்பர்மலை-கலைவாணி சனசமூக நிலையம், தொண்டமனாறு-ஆரம்பசுகாதார நிலையம் தொண்டமனாறு, உடுப்பிட்டி-உடுப்பிட்டி வாசிகசாலை, இமையாளன்-இமையாளன் மாதர் சங்கம், அல்வாய் மேற்கு-அல்வாய் மேற்கு சிகிச்சை நிலையம், அல்வாய் தெற்கு-அல்வாய் கிராமோதயசென்ரர், வதிரி-வதிரிசிகிச்சை நிலையம், கரணவாய்வடக்கு-ஆரம்பசுகாதார நிலையம் கொற்றாவத்தை உடுப்பிட்டி கிராமோதய சென்ரர், புலோலி தெற்கு துன்னாலை வடக்கு-சுகாதார வைத்திய அதிகாரிபணிமனை, சோளங்கள்-சோளங்கள் சனசமூக நிலையம், கரணவாய் தெற்கு-மணியகாரன் தோட்டம், துன்னாலை தெற்கு-கட்டைவேலி சிகிச்சா நிலையம், கரவெட்டி தெற்கு-விக்னேஸ்வரா, கரவெட்டி மேற்கு-ம.ம.ம.ம. கரவெட்டி, அம்பன்-க.ம.ம.ம. அம்பன் மணற்காடு, கப்புதூ-கப்புதூ,

*மருதங்கேணி*

கட்டைக்காடு-கட்டைக்[illegible] பொது மண்டபம், வெற்றிலை[illegible] கணி-வெற்றிலைக்கேணி பாட[illegible]லை, உடுத்துறை-திலீபன்மருத்து[illegible]னை ஆழியவளை, செம்பியன்பற்று-கிராமியவைத்தியசாலை மருதங்கேணி மாமுனை,

*சுகாதாரவைத்திய அதிகாரி–மானிப்பாய்*

சுற்றயல்கூறு-சங்கானை, ஆரம்ப சுகாதார நிலையம்-பண்ணாகம், மத்தியமருந்தகம்-தொல்புரம், மத்திய மருந்தகம்-வட்டுக்கோட்டை, கிராமிய வைத்தியசாலை-வட்டுக்கோட்டை, வை.எம்.சி.ஏ-நவாலி, ஆரம்பசுகாதார நிலையம்-மூளாய், ம.ம.ம.ம.-மானிப்பாய், ஆரம்பசுகாதார நிலையம்-சாவற்காடு, கிராமஅபிவிருத்திசபை-கட்டுடை, கிராமஅபிவிருத்திசபை-ஆனைக்கோட்டை, கிராமோதயசென்ரர்-ஆலங்குளம், கிராமோதயசென்ரர்-பிரான்பற்று, மத்தியமருந்தகம்-இளவாலை, கிராமியவைத்தியசாலை-பண்டத்தரிப்பு, கிராமோதயசென்ரர்-சுதுமலை,

*சுகாதாரவைத்தியஅதிகாரிபணிமனை–ஊர்காவற்றுறை*

மாவட்ட வைத்தியசாலை-ஊர்காவற்றுறை, ஆரம்பசுகாதார நிலையம்-புளியங்கூடல், ஆரம்பசுகாதார நிலையம்-நாவாந்துறை, சுற்றயல்கூறு-காரைநகர், வாரியார் வளவு-காரைநகர், சுற்றயல்கூறு, அனலைதீவு, ஆரம்பசுகாதாரநிலையம்-எழுவைதீவு, ஆரம்பசுகாதார நிலையம்-மண்டைதீவு, ஆரம்பசுகாதார நிலையம்-அல்லைப்பிட்டி, கிராமிய வைத்தியசாலை-வேலணை, ஆரம்ப சுகாதார நிலையம்-சரவணை, மாவட்டவைத்தியசாலை-புங்குடுதீவு, சுற்றயல்கூறு-நயினாதீவு, மாவட்ட வைத்தியசாலை-நெடுந்தீவு, நெடுந்தீவு வடக்கு.

*சுகாதாரவைத்திய அதிகாரிபணிமனை–கோப்பாய்*

கிராமஅபிவிருத்திச்சங்கம்-இத்திக்கலட்டி, சுற்றயல்கூறு-அச்சுவேலி, மத்தியமருந்தகம்-புத்தூர், ஆரம்பசுகாதார நிலையம்-வாதரவத்தை, கிராமஅபிவிருத்திச்சங்கம்-சிறுப்பிட்டி, கிராமஅபிவிருத்திச் சங்கம்-நீர்வேலி, ஆரம்பசுகாதார நிலையம்-அச்சுவேலி, ஆரம்ப சுகாதார நிலையம்-ஊரெழு, மத்திய மருந்தகம்-உரும்பிராய், சுகாதார வைத்தியஅதிகாரி பணிமனை-கோப்பாய், ஆரம்பசுகாதாரநிலையம்-இருபாலை, கிராமஅபிவிருத்தி சங்கம்-கட்டைப்பிராய், கலாமன்றம்-திருநெல்வேலி, ம.ம.ம.ம.-கோண்டாவில், மத்தியமருந்தகம்-கொக்குவில்,கிராம அபிவிருத்திச்சங்கம்-கொக்குவில் வடக்கு, கிராம அபிவிருத்திச்சங்கம்-அரியாலை,

*யாழ். மாநகரசபை நிலையங்கள்*

சுவாமியாரி வீதி சிகிச்சை நிலையம், பாஷையூர் மகப்பேற்று நிலையம், குருநகர் சி.டி.எம்.ஏச், அரியாலை மகப்பேற்று நிலையம், நல்லூர் சிகிச்சை நிலையம், கந்தர்மடம் சிகிச்சை நிலையம், வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையம், நாவலர்வீதி மகப்பேற்று நிலையம், யூபிலி மகப்பேற்று நிலையம், யா/கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்.

# பொதுக்கட்டமைப்பை இரத்துச் செய்யும்வரை அரசாங்கத்திற்கு எம் ஆதரவு கிடையாது

## ஜாதிக ஹெல உறுமய கூறுகின்றது

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பை ரத்துச் செய்யும்வரையில் பாராளுமன்றத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கப் போவதில்லையென ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார். பொதுக்கட்டமைப்பு நாட்டைப் பாதிக்கும் என்பதாலேயே தாம் இந்தத் தீர்மானத்துக்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தேசியத்தையும், பௌத்தத்தையும் பாதுகாப்பார்கள் என்ற நம்பிக்கையுடனேயே ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கத் தயாராகவுள்ளதாகத் தாம் முன்னர் அறிவித்திருந்ததாகத் தெரிவித்துள்ளார்.

எனினும், கடல்கோள் அனர்த்தத்தால் நாட்டு மக்களுக்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், சிறிலங்கா அரசாங்கம் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லையெனவும் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் தலைவி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக் கட்டமைப்பு என்ற பெயரில் ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளதாகவும்,

இதனைத் தாம் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் ஒப்பந்தமாகவே கருதுவதாகவும் ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்

## இணைந்து செயற்பட பிரதமரிடம் கோரல்

மீண்டும் ஜே.வி.பி யினரை இணைத்துக்கொண்டு அரசாங்கத்தை நடத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தின் அமைச்சர்கள் பிரதி அமைச்சர்கள் அமைச்சின் செயலாளர்கள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அமைச்சர்கள் மங்கள சமரவீர அநுராபண்டார நாயக்க ஆகியோர் ஜே.வி.பி யினிடம் சமாதானமாக இயங்கி செயற்படவேண்டும் எனவும்வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## டீசல் விலை உயரின் சேவை நிறுத்தம்!

மீண்டும் நாட்டில் டீசல் விலையை அரசாங்கம் உயர்த்தப்போவதாக அறிவித்துள்ளபடியால் மேலும் மக்களை சிரமத்திற்குள்ளாக்காமல் தனியார்போக்குவரத்து பேருந்து சேவைகளை நிறுத்தப்போவதாக தனியார் பேருந்து போக்குவரத்து உரிமையாளர்கள் தீர்மானம் மேற்கொண்டுள்ளனர். நாட்டின் அபிவிருத்திப் பணிகளில் தனியார்துறை பேருந்து போக்குவரத்து கணிசமான பங்கினை ஆற்றி வருகின்றது.ஆனால்தனியார் பேருந்து போக்குவரத்தை ஊக்கு விப்பதற்கு இதுவரை அரசு எந்தத் தீமானங்களையும் மேற்கொள்ளாதபடியால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதென தனியார்போக்குவரத்து சங்கத்தலைவர் வஸந்தசில்வா தெரிவித்துள்ளார்.

# இயந்திரப்படகொன்று புத்தளத்தில் கரையொதுங்கியது

இந்திய மீனவர்கள் பயன்படுத்தும் இயந்திரப் படகொன்று புத்தளம் கொத்தான் தீவு சின்னப்பாடு பெருங்கடல் பிரதேசத்தில் கரையொதுங்கியுள்ளது. கடந்த திங்கட் கிழமை அதிகாலை இந்தப் படகு கரை ஒதுங்கிய நிலையில் இதில் மீனவர்கள் இருந்தார்களா? என்பது குறித்து உடனடியாக தகவல்கள் வெளியாகவில்லை என முந்தல் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் 20 அடி நீளம் கொண்ட இந்தப் படகில் இரண்டு இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருந்ததாகவும் அவை பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிசார். தெரிவித்துள்ளனர். இதேவேளை இது குறித்து இந்திய உயர்ஸ்தானிகராலயத்திற்கும் அறிவிக்கப்பட்டு உள்ளதாக தெரிவித்துள்ளனர். (32)

## ஆலய அர்ச்சகர் தேவை



புளியங்குளம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக் கோவிலுக்கு நித்திய பூசை செய்வதற்கான சைவக் குருக்கள், அல்லது பூசகர் உடன் தேவை. 40 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல்வேண்டும் தங்குமிட வசதி மாதாந்த ஊதியம் என்பன நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் தொடர்புகளுக்கு.

பரிபாலனசபை,
ஸ்ரீமுத்துமாரியம்மன் திருக்கோவில்,
யாழ். கண்டி வீதி,
புளியங்குளம்.

(சி-12295)

## தமிழீழ மாவட்ட நீதிமன்று - கிளிநொச்சி

வ.இல:- 393/05,
தன்மை:- பணம்,
பெறுமதி:- 40000/=

**வழக்காளி.**
நடராசா பாஸ்கரன்,
பிள்ளையார் கோவிலடி,
அக்கராயன். எதிர்.

**எதிராளிகள்.**
1) சீ.எஸ்.செந்தீபன்,
2) திரு. தர்மபாலா,
தமிழ்த்தாய் இரத்தினவியல்,
சிவா களஞ்சியம் அருகாமை,
ஏ-9 வீதி கிளிநொச்சி.

### பகிரங்க அறிவித்தல்

மேற்குறித்த எதிராளிகளுக்கு,

வழக்காளியால் இந் நீதிமன்றில் உங்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மேற்படி வழங்கில், உங்களுக்கான அழைப்பாணையைச் சேர்ப்பிக்க முனைந்த போது, நீங்கள் குறித்த அழைப்பாணைகளைப் பெற்றுக்கொள்வதைத் திட்டமிட்ட ரீதியில் தவிர்த்து வருவதால் இப்பகிரங்க அறிவித்தல் பிரசுரிக்கப்படுகிறது குறித்த பகிரங்க அறிவித்தல் வெளியாகி 14 நாட்களுக்கிடையில் நீங்களோ அல்லது உங்களது நலனில் அக்கறை உடையவரோ, மன்றில் தோன்றி சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் உங்களுக்கு எதிராக ஒரு முக விளக்கம் நடாத்தப்பட்டு, தொடர் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இத்தால் இப்பகிரங்க அறிவித்தல் மூலம் அறியத்தரப்படுகின்றது.

"இந்த 2005ஆம் ஆண்டு07ஆம் மாதம் 06 ஆம்திகதி
"மன்றின் கட்டளைப்படி"

வரைபு .. வழக்காளி சட்டவாளர்
**தா.இ.குலசங்கர்,**
"பகலவன் போட்டோக் கொப்பி"
டிப்போச் சந்தி,
இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. (சி-12311)

**செ.மாணிக்கராசா**
பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று
கிளிநொச்சி.

## கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த மகோற்சவம்

நாகதம்பிரான் ஆலய வருடாந்த மகோற்சவம் 03-07-2005ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி (11) பதினொரு தினங்கள் நடைபெறுகின்றது. 12.07.2005 செவ்வாய் தேர் உற்சவமும், 13.07.2005 புதன் தீர்த்தோற்சவமும் நடைபெறும் என்பதை நாகதம்பிரான் அடியவர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

(சி-12310) ஆலயபரிபாலன சபையினர்


**கணனி உலகில் உலா வர உங்கள் கரத்திற்கு ஊன்றுகோல்போல் நிற்கின்றார்கள் ICS கணனிப் பயிற்சி நிலையத்தினர்**



ICS புதுப் பொலிவுடன் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது

காலம் 17.07.2005
நேரம் பி.ப 4.30

| COURSE | Duration |
|---|---|
| **Diploma In MS-Office** | |
| Fundamentals 0f Computer studies | |
| MS-Word | 1 Month |
| MS-Excel | 1 Month |
| MS-Power point | 1 Month |
| MS-Access | 1 Month. |
| **Diploma In Desk top pubIishing** | |
| Fundamentals 0f Computer studies English tamil Typing practice. | |
| Page Maker | 2Months |
| Photh Shop | 2Months |
| Corel Draw | 1Month. |
| **Primary** | |
| Level - 1 | 6 Months |
| Level - 2 | 6 Months. |

**உங்களுக்காகவே!**
- சிறுவர்கள் (8-12 வயது)
- பாடசாலை மாணவர்கள் (தரம் 7-10)
- A/L பரீட்சை எழுதிய மாணவர்கள்
- அலுவலகங்களில் பணிபுரிவோர், கணனி ஆர்வலர்.

அனுமதி பெற்றுக்கொள்ள நேரில் தொடர்பு கொள்ளவும்.

முகவரி: ICSகணனிப்பயிற்சி நிலையம்,
இலங்கை வங்கி அருகாமை,
யாழ்.சாலை, கிளிநொச்சி.

(6344)


# சாவு அறிவித்தல்

## செல்லத்துரை திரவியம்

மீசாலையைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரம் நீவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை திரவியம் அவர்கள் 06. 07. 2005 அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை நாகம்மாவின் அன்புமகனும், நடராசா இராஜலட்சுமியின் அன்பு மருமகனும், இரதியின் அன்புக்கணவரும், அருணா, அஜித்தா, றஜித்தா, துஸ்யந்தினி (கொ/தி/ம/வி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் (அமரர்) தங்கராசா, யோகராசா, இந்திராணி, பவளராணி (மீசாலை) லோசனா (சுவிஸ்) பரமேஸ்வரி சற்குணராசா, பற்குண ராசா (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வானந்தன் (சுவிஸ்) சிறி (இந்தியா) சிவா (லண்டன்) ஜெயலட்சுமி, யோகராணி, சின்னத்துரை, தனபாலசிங்கம் காந்த ரூபா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். இவரது இறுதிக்கிரியைகள் 09. 07. 2005 அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.1.00 மணியளவில் நீவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்
(6345) **சகோதரன் (குணம்)**


# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

ஆசிரியர்களுக்கான மாத இதழ் தனி - 25/= வருடசந்தா - 300 /=, 49/1 மடவலிகடவீதி இராஜகிரி T.P 011-2871713

(6334)

# சேதுக்கால்வாயால் ராமர் பாலத்துக்கு ஆபத்து

—தயானந்த சரஸ்வதி—

சேது சமுத்திரத் திட்டக்கால்வாய் தோண்டும் போது ராமேசுவரத்துக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள கடல் ஆழப்படுத்தப்படும். அப்போது பக்தர்கள் நம்பும் ராமர் பாலம் அழிந்துவிடும் என்று தயானந்தசரஸ்வதி சாமிகள் கவலை அடைந்துள்ளார். அவர் இது பற்றிக் கூறியதாவது; ராமர் பாலம் என்பது ராமாயணத்தில் வரும் புராணம் தானே என்று கருதிவிடக்கூடாது. ராமேசுவரம் கடலுக்கடியில் மண்ணையும், கற்களையும், பாறைகளையும் கொட்டி பாலம் அமைத்ததற்கான சாத்தியக்கூறுகள் உள்ளதாக நாசா செயற்கைக் கோள் ஆய்வில் உறுதி செய்துள்ளது. இலங்கைக்கும் ராமேசுவரத்துக்கும் இடைப்பட்ட கடல்பகுதி இன்றும் திட்டுத் திட்டாகக் காணப்படுகிறது.

சேது சமுத்திரக் கால்வாய் அமைப்பதால் ராமேசுவரம் பகுதியில் பொருளாதாரம் வளர்ச்சி அடையும் என்று நாம் சந்தோஷப்பட்டுக் கொள்கிறோம். அதே சமயம் ராமேசுவரத்தின் புனிதத் தன்மை கெட்டுப் போய் விடும் என்றார்.

## சாவு அறிவித்தல்

### இராமநாதர்-நவரத்தினம்


*(கிராமசேவையாளர்-கரும்புள்ளியான்)*

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல 469 திருநகர் 4 ஆம் யூனிற் யோகபுரம் மல்லாவியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதர் நவரத்தினம் அவர்கள் (கிராமசேவையாளர் கரும் புள்ளியான்) அவர்கள் 06.07.05 அன்று சாவடைந்துள்ளார். அன்னார், இராமநாதர் நாகமுத்து ஆகியோரின் அன்பு மகனும், காலம்சென்ற பிலோமிலா யோகராணி அவர்களின் பாசமிகு கணவரும், காலம் சென்ற இன்னாசிமுத்து, தெய்வானை ஆகியோரின் அன்பு மருமகனும், பிரதீபன் (பிரான்ஸ்), துஷாபன் (பொறியியல் பீடம் பேராதனைப் பல்கலைக்கழகம்) சுபோஜினி, லயந்தினி, லதீஷன் கிருஷாயினி, சதீஷன், உசாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலம்சென்ற குணரத்தினம், நாகரத்தினம், முருகேசன் பிள்ளை (பிரான்ஸ்), காலம் சென்ற மங்கயற்கரசி பரமநாதன் (பிரான்ஸ்) குலரத்தினம் (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரனும், காலம் சென்ற ரோசம்மா ஜேசுதாஸ் (கல்மடு) காலஞ்சென்ற செல்வரத்தினம், குணரத்தினம் (கனகாம்பிகை) நொபேட் அரியநாயகம் (வன்னேரி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 8 ஆம் திகதி மாலை 3.00மணிக்கு திருநகர் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் பிள்ளைகள்.

(6006)

## கந்தசாமி-அரிச்சந்திரன் அவர்களின் 31 ஆவது நாள் நினைவுகள்



தோற்றம் -1962-01-08

மறைவு-2005-06-09


4 ஆம் வட்டாரம், மு/புதுக்குடியிருப்பு

கோரமான வாகனவிபத்தில் பலியான எங்கள் தெய்வத்தை எங்களால் என்றும் மறக்க முடியாது காடு,மேடு நடந்து ஆடுமாடாய் உழைத்து தேடிய தேட்டங்களால் எமை வாழ்வாங்கு வாழ வைத்த சோதியே, சுடரே, ஒளிவிளக்கே உங்கள் பிரிவால் புழுவாய்த் துடிக்கின்றோம். ஆற்றுவதற்குவரி இல்லை. ஆறவும் வழியில்லை. தேற்றிவந்த தெய்வம் போய்ச் சேர்ந்துவிட்டார். எப்படித்தான் தேறுவது.

*அன்புத்தெய்வத்தின் 31ஆவது நாள் நினைவுகள் 9.07.2005 அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அவரது 31 ஆம் நாள் கிரியையில் கலந்து கொண்டு மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.*

*தகவல்:-*
*மனைவி பிள்ளைகள்,*
*04 ஆம் வட்டாரம்,*
*புதுக்குடியிருப்பு.*

(6183)



### முத்துஐயன்கட்டு வலதுகரை தான்தோன்றி நாகதம்பிரான் ஆலய பொங்கல்விழா

நிகழும் பார்த்திபவருடம் ஆனித்திங்கள் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (12.07.2005) இரவு பொங்கலும், 13.07.2005 புதன்கிழமை பகல் அன்னதான நிகழ்வும், ஏலவிற்பனையும் நடைபெறவுள்ளதால் அடியார்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலனசபை.

(6184)

## கண்ணிவெடி நடவடிக்கை வாரம்

## 2005 யூலை 04-10 திகதிகளில்

வெண்புறா WHITE PIGEON

### இந்த வாரத்தில் நாம் செய்ய வேண்டியவை என்ன?

- வார நிகழ்வுகளில் தவறாது பங்கு கொள்வோம்.
- நிகழ்ச்சியினை நடாத்துபவர்களின்அறிவுரைகளைக் கிரகிப்போம்.
- எங்கள் குறைகளை முறையீடு செய்வோம்.
- எமது மீள்குடியேற்றத்தினை பாதுகாப்புடன் அமைப்போம்.
- கண்ணிவெடி நடவடிக்கையாளர்களுக்கு பூரண ஆதரவுஅளிப்போம்.
- கண்ணிவெடிகளில்லாத தாயகத்தை காண முயல்வோம்.
- கண்ணிவெடிகளை தடைசெய்யும் கோட்பாட்டினை வலுப்படுத்துவோம்.
- எமது பாதுகாப்பினை நாமே உறுதிப்படுத்துவோம்.


வெண்புறா நிறுவனம்-வன்னி

(சி.12317)



கிளி. கிளிநொச்சி ம.வி. மாணவிகளில் 15 வயதுப் பிரிவு, 17 வயதுப் பிரிவு வலைப்பந்தாட்ட அணியினர் கிளிநொச்சி மாவட்ட நிலையில் முதலிடம் பெற்று வவுனியாவில் ஆரம்பமான வடக்கு-கிழக்கு மாகாண மட்டப் போட்டியில் பங்குகொள்ளச் சென்றனர். மாவட்ட மட்டத்தில் நடந்த பல போட்டிகளில் இவ்வணியினர் வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (கு, சோ)

# லண்டன் நகரில் நடந்த தாக்குதலினால் 2012 ஒலிம்பிக் நடத்தும் வாய்ப்பு மறுக்கப்படாது




## ஒலிம்பிக் கமிட்டித் தலைவர்

2012ஆம் ஆண்டு கோடைகால ஒலிம்பிக் போட்டியை நடாத்தும் வாய்ப்பைப் பெற்ற சில மணி நேரங்களில் லண்டனில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு காரணமாக அந்நாட்டில் ஒலிம்பிக் நடாத்தும் வாய்ப்பு எந்தவிதத்திலும் இரத்துச் செய்யப்பட மாட்டாதென சர்வதேச ஒலிம்பிக் கமிட்டித் தலைவர் தெரிவித் துள்ளார்.

லண்டனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல்கள் தொடர்பாக சர்வதேச ஒலிம்பிக் கமிட்டி தலைவர், பிரிட்டன் பிரதமர் ரொனி பிளேயருக்கு அனுதாபம் தெரிவித்துள்ளார்.

2012ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஒலிம்பிக் போட்டிகளை லண்டன் நகரில் நடத்துவதற்கான போட்டியில் பிரிட்டனுக்குச் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து குண்டுத்தாக்குதல்கள் இடம்பெற் றுள்ளது. இத்தாக்குதல்கள் காரணமாக அந்த வாய்ப்பு மறுக்கப்படமாட்டாதென சர்வதேச ஒலிம்பிக் கமிட்டித்தலைவர் தெரிவித் துள்ளார்.

# மேற்கிந்தியத்தீவு அணியில் முன்னணி வீரர்கள் இல்லை வருத்தப்படுகிறார் முத்தையா முரளிதரன்




மேற்கிந்தியத்தீவுகள் அணியில் முன்னணி வீரர்கள் இல்லை. இப்படி ஒருவர் கவலைப்படுகிறார் என்றால் அந்த அணியின் தலைவர் சந்தர்போலாக இருக்குமென்று நீங்கள் நினைக் கலாம்... ஆனால், அது தவறு வருத்தப்படுபவர் இலங்கை அணியின் 'சுழல் ஜாம்பவான்' முத்தையா முரளிதரன்.

மேற்கிந்தியத்தீவு அணி இரண்டு டெஸ்ட் முத்தரப்பு ஒருநாள் தொடர்களில் பங்கேற்பதற்காக இலங்கை வந்துள்ளது. விளம்பர சர்ச்சை தொடர்பாக இந்தப் பயணத்தில் லாறா, கெய்ல்ஸ் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் இடம் பெறவில்லை. ஒரு வகையில் இது இலங்கை அணிக்கு சாதகமான அம்சம் தானே என்று நீங்கள் நினைக்கலாம்.

ஆனால் நிலை வேறு விதமாக உள்ளது. லாறா இல்லாத ஒரு அணியுடன் மோதுவதா என்று கவலைப்படுகிறார் இலங்கை 'சுழல்' பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன். இவர் தோள் பட்டை காயத்தில் இருந்து மீண்டு கிட்டத்தட்ட ஒரு ஆண்டுக்கு பிறகு டெஸ்டில் களமிறங்குகிறார். கொழும்பில் வரும் 13ஆம் திகதி தொடங்கவுள்ள முதல் டெஸ்ட்டுக்கு தயாராகி வரும் முரளிதரன் தனது பேட்டியில் கூறுகையில்; "பிரயன் லாறா போன்ற ஒரு தரமான வீரருக்கு பந்து வீசுவது சவாலான விடயம். அவரைப்போன்ற வீரர் களுக்கு மீண்டும் பந்து வீச முடியாதது வருத்தம் அளிக் கிறது. கடந்த முறை (2001) மேற்கிந்தியத்தீவு அணி இங்கு சுற்றுப்பயணம் மேற் கொண்டபோது, லாறா எனது பந்து வீச்சை விளாசித்தள்ளினார். மூன்று போட்டிகளில் 688 ஓட்டங்கள் குவித்து அசத்தினார். எந்த வீரர் ஓட்டங்களை அதிகமாகக் குவிக்கின்றாரோ அவரே சிறந்த வீரராகக் கருதப்படுகின்றார். எனது பந்துவீச்சு அனுபவத்தில் அவர் ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரர்.

டெஸ்ட் போட்டியில் சச்சின் டெண்டுல்கருக்கு பந்து வீச ஆசையாக உள்ளது. ஆனால், கடந்த எட்டு ஆண்டுகளாக அந்த வாய்ப்பு எனக்கு அமையவில்லை. நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய அணி இலங்கை வந்தபோது சச்சின் காயம் காரணமாக இடம் பெறவில்லை. மீண்டும் அந்த வாய்ப்பு எப்போது அமையும் எனத் தெரியவில்லை. ஒரு ஆண்டுக்குப் பிறகு மீண்டும் களமிறங்குகிறேன். மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிரான முதல் டெஸ்டை ஆவலோடு எதிர் நோக்கியுள்ளேன். லங்காஷயர் கவுண்டி அணிக்காக விளையாடி ஆறு போட்டிகளில் 36 விக்கெட் வீழ்த்தி நல்ல நிலையிலுள்ளேன். சர்வதேச அரங்கில் மீண்டும் ஒரு சுற்று சுற்றி வருவேன் என்று நம்பிக்கையுடன் கூறுகிறார் இலங்கையின் முதல் நிலை வீரர் முரளிதரன்.

91டெஸ்ட் போட்டியில் விளையாடியுள்ள முரளிதரன் 532 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். வோர்ன் 123 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 583 விக்கெட்டுடன் முதலிடத்தில் உள்ளார்.



சிறிலங்கா, மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் எதிர்வரும் 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முதலாவது டெஸ்ட்க்கு முன்னர் பயிற்சியில் ஈடுபடும் மேற்கிந்தியத்தீவுகள் அணியினர்.

# சச்சினுக்கு மீண்டும் சத்திரசிகிச்சை நான்கு மாதங்களுக்கு ஆட முடியாது



இந்திய கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின்டெண்டுல்கர் மேலும் நான்கு மாதங்களுக்கு சர்வதேச போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக முழங்கை வலியால் (டென்னிஸ் எல்-போ) அவதிப்பட்டு வரும் டெண்டுல்கர் பல அருமையான போட்டித்தொடர் களில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் மீண்டும் வேதனை அதிகரிக்க நேற்று முன்தினம் லண்டன் சென்ற சச்சின் சத்திரசிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார்.

இதனால் மேலும் நான்கு மாதங்களுக்கு அவ ரால் விளையாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



இந்திய கிரிக்கெட் அணியின் உத்தேச வீரர் களுக்கான இரண்டாம் கட்ட பயிற்சி முகாம் பெங்களூரில் நேற்று முன்தினம் தொடங்கியது. இந்த முகாமில் பங்கேற்ற யுவராஜ்சிங், சேவாக் இருவரும் உல்லாசமாகப் பேசிக் கொண்டே வருகின்றனர். (அடுத்த படம்) முகாமில் கும்ளே யின் உயரம் பரிசோதிக்கப்படுகிறது.

# வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டி யூனியன் கல்லூரி மூன்று பிரிவுகளிலும் பங்கேற்பு

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக் களத்தினால் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்படும் விளையாட்டுப்போட்டியில் வலைப்பந்தாட்டப்போட்டி வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றும், இன்றும் நடைபெறுகின்றது.

இந்தப் போட்டியில் யாழ்.மாவட்டத்திலிருந்து 15,17,19 வயதுப் பிரிவுகளில் 1ஆம், 2ஆம் இடங்களைப் பெற்ற பாடசாலை அணிகள் பங்குபற்றுகின்றன.

போட்டியில் பங்குபற்றவுள்ள அணிகள், தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி இந்தச்சுற்றுப் போட்டியில் யூனியன் கல்லூரி மூன்று பிரிவுகளிலும் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கீ)





கரைச்சிப் பிரதேச சபையினரின் ஜெயந்திநகர் முன்பள்ளி வருடாந்த திறனாய்வுப் போட்டி நேற்று நடைபெற்றபோது விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்ற சிறார்களைப் படங்களில் காணலாம். (படங்கள் : சோதி)

# மாட்டு வண்டி சவாரிப் போட்டி

வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகமும், வட்டக்கச்சி விவசாயப் பெருமக்களும் இணைந்து நடாத்தும் மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு வட்டக்கச்சி கலைவாணி சவாரித் திடலில் நடைபெறவுள்ளதாக போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். இப்போட்டி அ, ஆ,இ, ஈ பிரிவுகளாக நடைபெறவுள்ளது. இதில் சிறப்புப் போட்டியாக கைக்கொடி சவாரிப் போட்டியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பருத்தித்துறை லீக் நடாத்தும் 9 பேர்கொண்ட கால்பந்துப்போட்டி


தமிழீழ விளையாட்டுத்துறை ஆதரவில் பருத்தித்துறை உதைபந்தாட்டலீக் நடாத்தும் ஒன்பது பேர் பங்குகொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியின் இரண்டாம் சுற்றுப்போட்டிகள் வதிரி பொம்மேர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இப்போட்டிகளில் இன்று நடைபெறவுள்ள போட்டியில் மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் லீக் முத்தமிழ் விளையாட்டுக்கழகம் எதிர் பருத்தித் துறை ஐக்கிய விளையாட்டுக்கழகமும், மாலை 4.30 மணிக்கு- அண்ணா சிலையடி இளைஞர் விளையாட்டுக்கழகமும் எதிர் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகமும் மோத வுள்ளன. (கீ)

# இந்திய அணியில் இடம்பெற்று புதிய பலத்தை நிரூபித்துக் காட்டுவேன்

## - இர்பான்பதான்

இந்திய அணியில் மீண்டும் பலத்தை நிரூபித்துக் காட்டுவேன் என சவால் விடுகிறார் வேகப்பந்துவீச்சாளர் இர்பான் பதான். தற்போது மிடில்சக்ஸ் கவுண்டி அணிக்காக விளையாடி வருகிறார். இந்தப் பருவகாலத்தில் இவர் பெரிய அளவில் சாதிக்காவிட்டாலும், தனது பலத்தை நிரூபிக்கத் தயார் என்கிறார். லண்டனில் இவர் அளித்த பேட்டி.பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் சிறப்பாக செயற் படாதது உண்மைதான். இங் கிலாந்து கவுண்டி போட்டிகளில் கிடைத்த அனுபவம் இனி வரும் போட்டிகளில் சாதிக்க உதவும் என நம்புகிறேன் என்றார்.





## சிந்தனைக்கு

அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவை புரியும் பணி;மக்களின் நல்வாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 09-07-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## பெயரளவில்.....!

இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்தால் முல்லைத்தீவில் ஆரம்பித்து வைக்கப்பட்ட தொலைபேசி சேவையினால் தமக்கு எந்த நன்மையும் கிட்டவில்லையென அப்பகுதி மக்கள் விசனம் கொண்டுள்ளனர். அதாவது மக்கள் எதிர்பார்த்த அளவிற்கு இணைப்புக்கள் வழங்கப்படாமையே இவ்விசனத்திற்குக் காரணமாகும்.

ஆனால் வன்னிப் பிரதேசத்தில் குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் அரசசேவைகள் இந்த வகையில் அரைகுறை நிலையில் காணப்படுவதும், மக்கள் இச்சேவைகள் கிடைக்காது அவதியுறுவது தொலைத் தொடர்பு விடயத்தில் மட்டுமல்ல. அதாவது தொலைபேசிச் சேவை உட்பட பல்வேறு சேவைகளும் இத்தகைய அரைகுறை நிலையிலேயே உள்ளன.

சிறிலங்கா அரசாங்கத்திற்கும்– விடுதலைப்புலிகளுக்குமிடையில் யுத்தநிறுத்த உடன்பாடு ஏற்பட்டு சுமார் மூன்றரை வருடங்கள் ஆகின்றன. இவ் யுத்த நிறுத்த உடன்பாட்டின் அடிப்படை நோக்கங்களில் ஒன்று இயல்புவாழ்வை மீளக்கொண்டு வருதல் என்பது .

ஆனால், இயல்புவாழ்க்கையை கொண்டுவருதல் என்பது ஒருபுறத்தில் இராணுவக் கெடுபிடிகளைத் தளர்த்தி மக்கள் சுதந்திரமாக நடமாடவும், தமது நடவடிக்கைகளைத் தொடரவும் அனுமதித்தல் என்பதையும், மற்றொரு புறத்தில் மக்களுக்குத் தேவையான சேவைகளையும், பொருட்களையும் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் என்பதாகவும் இருத்தல் வேண்டும்.

ஆனால் இயல்பு வாழ்வை மேற்கொள்ளுதல் என்ற விடயத்தில் சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்பினதும், அரசாங்கத்தினதும் ஒத்துழைப்பு மக்களுக்குப் பூரணமாகக் கிடைக்கப்பெறவில்லை. யுத்தநிறுத்தம் அமுலாகி மூன்றரை வருடமாகும் வேளையிலும் மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேற முடியாமலும், சுதந்திரமான நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலையிலுமே உள்ளனர். இதன் காரணமாக அவர்கள் தொடர்ச்சியான போராட்டங்களில் ஈடுபடவேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

இதை ஒத்ததாகவே மக்களுக்கு சேவைகளும், பொருட்களும் தேவையான அளவில் வழங்கப்படுவதாக இல்லை. அதாவது மக்களுக்கான அடிப்படைத்தேவைகளான சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம், வீதிகள், தொலைத்தொடர்பு போன்றவை நிறைவு செய்யப்பட்டவையாக இல்லை.

சேவைத்துறையைச் சார்ந்த இவை யுத்தநிறுத்த உடன்பாட்டின் பின்னர் எடுத்துக்காட்டிற்காக வழங்கப்படுபவையாக உள்ளனவே ஒழிய மக்களின் தேவைகளை நிறைவு செய்பவையாக இல்லை. இவை ஒருவகையில் பரீட்சார்த்தம் போன்றதாகவும், மறுபுறத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவினதாகவுமே இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பல சேவைகளுக்கு அனுமதி, அங்கீகாரம் வழங்கப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றபோதிலும், அவை பூரணப்படுத்தப்படும் வகையில் அன்றி முழு அளவில் செயற்படும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக இல்லை. இதற்கு ஒருபுறத்தில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளும், இன்னொரு புறத்தில் படைத்தரப்பின் நடவடிக்கைகளும் தடையாகக் காணப்படுகின்றன.

அதாவது தேவையின் அளவில் ஒரு திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுபவதாக இல்லை. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலானதாகவே நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாகவுள்ளது. அது மட்டுமன்றி ஒதுக்கீடு செய்யப்படும் நிதியும் சீராக விநியோகிக்கப்படுவதாகவும் இல்லை. எடுத்துக்காட்டாக பத்துக்கிலோமீற்றர் நீளமான வீதியாயின் அதற்கு இரண்டு கிலோமீற்றர் அல்லது மூன்று கிலோமீற்றர் ஒதுக்கீடு செய்யப்படுவதும் அதற்கான நிதிகூட ஒழுங்காக விநியோகம் செய்யப்படாத நிலையுமே உள்ளது.

அடுத்ததாக அரசாங்கம் சில ஒதுக்கீடுகளையும், பொருட்களையும் அனுமதிப்பினும் கூடப் பாதுகாப்புக் காரணங்கள் எனக் கூறிப் பல பொருட்களுக்கு ஆயுதப்படைத்தரப்பு அனுமதி வழங்க மறுத்து வருகின்றது. அன்றி இழுத்தடிப்புச் செய்தும் வருகின்றது. அதாவது சட்டத்திற்கோ உடன்பாட்டிற்கோ இசைவாகச் செயற்பட ஆயுதப்படைத்தரப்புத் தயாராவில்லை.

இந்த வகையில் வடக்கு கிழக்கில் குறிப்பாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள பிரதேசங்களில் மக்களுக்கான அரசின் சேவைகள் கிடைக்கப்பெறுதல் என்பது பெரிதும் இடையூறு மிக்கதொன்றாகவே உள்ளது. அதாவது அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பெயரளவிலானவையாக மட்டுமே உள்ளன. அன்றி பற்றாக்குறையானவையாகவே உள்ளன. அதாவது முல்லைத்தீவில் ரெலிக்கொம் செயற்படத்தொடங்கியபோதும் மக்களுக்குத் தொலைபேசி சேவை கிட்டாததுபோன்று.

# வடக்கு கிழக்கிற்கு சுனாமி நிவாரண நிதி அமெரிக்கா வழங்கக்கூடாது

### ஹெல உறுமய அமெரிக்க சனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பிரதேசத்திற்கு அமெரிக்கா நிதி உதவி வழங்கக் கூடாது என ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்றக்குழுத் தலைவர் அமெரிக்க சனாதிபதி புஷ்ஷைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஊடாக சனாதிபதி புஷ்ஷிற்கு அனுப்பிவைத்துள்ள கடிததில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையினூடாக அமெரிக்கா 150 கோடி ரூபாவை வடக்கு கிழக்கு புனர்நிர்மாண கட்டுமான வேலைகளுக்கு வழங்க உறுதி அளித்துள்ளது. இந்த நிதியை வழங்கக் கூடாது, பயங்கரவாத அமைப்புக்களை தங்கள் நாடு தடைசெய்துள்ளது, பயங்கரவாதத்திற்கு எதிராக தாங்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு நன்றி செலுத்துகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## வாக்களிப்பது எப்படி என்ற விபரங்களை மக்களுக்கு விளக்க தே.ஆணையாளர் நடவடிக்கை

(கொழும்பு)

திடீரென நாட்டில் பொதுத் தேர்தல் நடந்தால் மக்கள் வாக்களிப்பதற்கு சகல விடயங்களையும் உள்ளடக்கிய அறிவித்தல்களை வெளியிடுவதற்கு சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க சகல மாவட்ட தேர்தல் காரியாலயங்களுக்கும் அறிவித்துள்ளார்.

அடுத்த வாரம்தொடக்கம் சகல தேர்தல் மாவட்டங்களுக்கும் வாக்காளர் அட்டைகளை அனுப்புவதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்படும் என தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளதுடன் மக்கள் வாக்களிப்பதெப்படி என்ற விபரங்களையும் மாவட்ட தேர்தல் திணைக்களங்கள் மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல் திணைக்கள சிரேஷ்ட உத்தியோகஸ்தர் தெரிவித்துள்ளார்.

# ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ நேற்று மன்னாருக்கு விஜயம்

(மன்னார்)

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ நேற்று மன்னாரிற்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

இதன்போது மன்னார் கச்சேரியில் உயர்மட்ட மாநாடொன்றை நடத்தியுள்ளார். மன்னார் அரச அதிபர் விஸ்வலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இம்மாநாட்டில் மன்னார் மாவட்டத்திலுள்ள சகல உயர்தர அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டு தமது திணைக்களத்தின் தேவைகளையும் குறைகளையும் எடுத்துக் கூறியுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து ஆளுநர் பேசாலை சென்று அங்கு மீனவர்களினது பிரச்சினைகளைக் கேட்டறிந்ததுடன் ,தலைமன்னாரிற்கு விஜயம் செய்து அங்கும் மீனவர்களினது பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

பின்னர் மடுத்தேவாலயத்திற்கு சென்று அங்கு வழிபட்டு, பின்னர் மன்னார் விஜயத்தை முடித்துக் கொண்டார். ஆளுநர் டிரோன்பெர்னாண்டோவுடன் அவரது செயலாளரும் வருகைதந்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

*– 15 வருடங்களுக்குப்பின் –*

## மன்னார்– சிலாவத்துறையில் இயங்கும் வைத்தியசாலை

(மன்னார்)

மன்னார் சிலாவத்துறையில் கடந்த 15 வருடங்களுக்கு பின்னர் வைத்தியசாலை ஒன்று இம் மாதம் முதலாம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியாக அன்ரனிதாஸ் நியமிக்கப்பட்டடுள்ளார். மேலும் இவ்வைத்தியசாலைக்கு அம்பியூலன்ஸ் வண்டியொன்றும் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

முன்னர் இப்பகுதியில் வசித்த நோயாளர் தாம் சிகிச்சை பெற்றுக் கொள்ளும் பொருட்டு 12 கிலோமீற்றர் தூரமுள்ள முருங்கனுக்கோ அல்லது மன்னார் பொது வைத்திய சாலைக்கோ பெரும் சிரமங்களின் மத்தியில் சிகிச்சை பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (18)

## சம்பளப்பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் வினாத்தாள் திருத்தும்பணி புறக்கணிக்கப்படும்

### – ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

நாடுமுழுவதிலும் உள்ள இரண்டு இலட்சம் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைகள் சம்பந்தமாக பல பிணக்குகள் ஏற்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் இப் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு சரியான முடிவுகளை எடுக்காததால் கல்விப்பொதுத்தராதர பரீட்சைப் பணிகளிலிருந்து [illegible] விலகப்போவதாக இலங்கை ஆசிரியர் சங்கம் அரசாங் கத்திற்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதன் முதல் கட்டமாக

இம்மாதம் 13 ஆம் திகதி பத்தாயிரம் ஆசிரியர்களைத்திரட்டி கல்வி அமைச்சின் முன்பாக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதென முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கு சனாதிபதி அவர்கள் சரியான பதிலை தராவிட்டல் டிசம்பர் மாதம் நடக்கும் கல்வி பொதுத் தராதரப் பரீட்சைப் பணிகளிலிருந்து முற்றாக விலகிக் கொள்ளப்போவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆழிப்பேரலை நிவாரண நிதி மாயம் பிரதமர் எடுத்த நடவடிக்கை என்ன?

### – ஐ.தே.கட்சி கேள்வி

ஆழிப்பேரலை நிவாரணத்திற்கு கென கிடைத்த பணம் மாயமாகப் போனது குறித்து பிரதமர் எடுத்த நடவடிக்கை குறித்து விசாரிக்குமாறு ஐக்கிய தேசிய கட்சி சிறிலங்கா சனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ என உள்நாட்டிலும், வெளிநாடுகளிலிருந்தும் கிடைத்த சுமார் 82 மில்லியன் ரூபா பணம் சம்பந்தமாக பிரதமர் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்னவென்று விரிவான விசாரணைகளை நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி சனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மாபெரும் மக்கள் பேரணியில் கலந்து கொண்ட அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரே இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

82 மில்லியன் ரூபா பணம் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகளுக்கு அமைச்சரவையின் அனுமதியைப் பெற்றுள்ளாரா? இல்லையா? என்பது பற்றி பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இதுவரை எதனையும் தெரிவிக்கவில்லை ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து ஏழு மாதங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை அந்தப் பணத்தை எதுவித நிவாரண நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தாதது ஏன் என்ற கேள்வியும் ஏழுகிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிச் செயலாளர் திஷ்ஸஅத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

# வேறு சில இராணுவ அதிகாரிகளையும் கொலை செய்ய முத்தலிப் கொலைச் சந்தேக நபர்கள் திட்டமிட்டிருந்தனர்

## - கொழும்பு நாளேடு தகவல்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவுக் கட்டளை அதிகாரி முத்தலிப் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள், வேறு சில முக்கிய இராணுவ புலனாய்வு அதிகாரிகளையும் கொல்லச் சதித்திட்டம் தீட்டியிருந்ததை இரகசியப் பிரிவு பொலிசார் கண்டறிந்துள்ளனர் என்று கொழும்பு நாளேடுஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் கபில ஹெந்ர விதாரண மற்றும் புலனாய்வுப் பிரிவின் மேஜர் ஒருவரையும் கப்டன் ஒருவரையும் கொலை செய்வதற்கு இவர்கள் திட்டமிட்டிருந்தமை இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள சிங்கள வர்த்தகருக்குச் சொந்தமான நீல வர்ண (ப்ளு பேர்ட்) வாகனத்தில் சென்றே இவர்கள் தங்களின் திட்டத்திற்கு தேவையான தகவல்களைச் சேகரித்துள்ளனர்.

இவர்களின் கொலை இலக்கு பட்டியலில் இருந்த முத்தலிப்பை கொலை செய்ய இதற்கு முன்னர் ஐந்து தடவைகள் சந்தேக நபர்கள் முயன்றுள்ளதாக தெரிய வந்துள்ளது.

கொழும்பு பொரளை கனத்தைக்கு அருகிலும், பௌத்தாலோக மாவத்தையிலுள்ள விகாரைக்கு அருகிலிருந்தும் தமது இலக்கை அடைவதற்காக இவர்கள் காத்திருந்துள்ளனர் என கண்டறியப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள மற்றொரு சந்தேக நபரான தற்போது வெளிவராத பத்திரிகையொன்றின் முக்கியஸ்தருக்குச் சொந்தமான வாகனத்திலேயே சந்தேக நபர்கள் தமது பயணங்களை மேற்கொண்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

முத்தலிப் கொலை சம்பந்தமாக கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சந்தேக நபர்கள் தம்மைக் கொண்டு செல்கையிலும் காவலில் வைக்கும்போதும் விசேட பாதுகாப்பு வழங்குமாறு நீதவானிடம் வேண்டுகோள் விடுத்தனர். அதற்கமைய அவர்களுக்கு விசேட பாதுகாப்பு வழங்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

சந்தேக நபர்கள் எதிர்வரும் 20ஆம் திகதி ஹொரணை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளனர். அதன் பின்னர் கங்கொடவில நீதிமன்றத்தில் முத்தலிப் கொலை வழக்கின் கீழ் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## நோர்வே....

கப்படுகின்றது. நோர்வே வெளிவிவகார அமைச்சர் வராதவிடத்து சமாதானத்தூதுவர் எரிக்சூல்கெய்ம் வருகைதரலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இதேவேளை, புலிகளின் போக்குவரத்துத் தொடர்பான அரசாங்கத்தின் பதிலுக்குத் தாம் காத்திருப்பதாகப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் குறிப்பிட்டுள்ளமை தெரிந்ததே. (32)

## பொதுக்கட்டமைப்பை....

சிரேஷ்ட உறுப்பினர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலங்கையில் உள்ள கனேடிய தூதுவர் ரேமன் வெலரி, பிரித்தானியத் தூதுவர் ஸ்டீவன் இவான்ஸ் ,ஐரோப்பியஒன்றியத்தின் வவ்டர் வில்மர்,அமெரிக்கா தூதரகத்தின் அரசியற்துறை அதிகாரி பற்றீசியா மஹோனி ஜப்பானின் பிரதி நிதிகளும் இந்த வேண்டுகோளை விடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் தனித்தனியே முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை கொழும்பில் சந்தித்து உரையாடியுள்ளனர்.

ஆழிப்பேரலை நிவாரண சபை உடன்படிக்கையினால் முஸ்லிம்களுக்கு பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளதால் இந்த சபைக்கு தன்னால்ஒத்துழைப்பு வழங்க முடியாது என்று ரவூப் ஹக்கீம் தன்னைச் சந்தித்த பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதற்கு முன்னர் அது சம்பந்தமாக ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் கூட நடத்தப்படவில்லை எனகுறிப்பிட்ட அவர் இந்த உடன்படிக்கைக்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்தும்ஆர்பாட்டங்களை நடத்தும் எனவும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புக்களின்போது முஸ்லிம் காங்கிரசின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ரி.ஹசன் அலி,எம். பாயிஸ் ஆகியோர். உட்பட சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## முஸ்லிம்...

வாசகங்கள் மற்றும் முஸ்லிம்கள் மீது காறித்துப்புவது போன்ற சம்பவங்கள் நடைபெறுவதாகவும் அவர் கூறி உள்ளார்.

இதேவேளை முஸ்லிம் அமைப்புக்கள் பற்றி பல ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. அல்-ஹைதா இயக்கம் பரந்துபட்ட ஆங்கங்கே சுயேட்சையாகச் செயற்படுகின்ற ஜிகாத் இயக்கம் போல் ஆகிவிட்டது எனவும், இது கடந்த சில ஆண்டுகளில் மற்றிட், இப்போது லண்டனில் நடந்த தாக்குதல்களுக்கு பொறுப்பாக இருக்கலாம் எனவும், இரண்டாவது ஈராக்கில் தற்போது நடைபெற்று வரும் கிளர்ச்சியில் இருந்து பல இஸ்லாமியத் தீவிரவாதிகள் தங்களுடைய புதிய யுக்திகளுடன் ஐரோப்பாவிற்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள் என்ற ஊகமும் நிலவுகின்றது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஜோர்டானிய தீவிரவாதத் தலைவர் சர்காலி ஐரோப்பாவில் இருந்து ஈராக்கிற்கும் ஈராக்கில் இருந்து ஐரோப்பாவிற்கும் முஸ்லிம் இளைஞர்களை அனுப்பிக்கொண்டிருக்கக்கூடும் என்பது பாதுகாப்பு வல்லுனர்களின் கருத்து.

இதில் ஏதாவது ஒன்று கூட சரி என்று நிருபணமானால் அது மேலை நாடுகளின் அரசுகளுக்கு மட்டும் அல்ல மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வசிப்பதாகக் கணிக்கப்படும் சுமார் 12 மில்லியன் முஸ்லிம் மக்களுக்குமே பாரிய விளைவுகளை ஏற்படுத்தக் கூடும் என மத்திய கிழக்கு ஆய்வாளர் றொஜப் கார்டி கூறியுள்ளார்.

## சிறுமி...

சட்டத்தரணி செல்வி சுகந்தி கந்தசாமியும், எதிர்த் தரப்பில் அரசால் எதிரிக்காக நியமிக்கப்பட்ட சட்டத்தரணியான மு. திருநாவுக்கரசும் ஆஜராகியிருந்தனர்.

அவ்வேளையில், எதிரியாகக் குறிப்பிடப்பட்ட அனலைதீவின் அதேபகுதியைச் சேர்ந்த நல்லதம்பி கோவிந்தவிஜே எனும் இளைஞரிற்கு பத்து வருட கடூழிய சிறைத் தண்டனை விதித்து நீதவான் தீர்ப்பளித்தார்.

எனினும், எதிரியை இரண்டு வார காலத்திற்கு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்க உத்தரவிட்ட நீதவான், தேவையேற்படின் எதிரி மேன்முறையீடு செய்வதற்கான சந்தர்ப்பத்தினையும் வழங்க அனுமதியளித்துள்ளார். (27, 33)

## எழிலன்....

றுள்ள யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப்ஹொக்லண்ட் நேற்றுமுன்தினம் திருமலை மாவட்டத்தின் இராணுவத்தளபதி, கடற்படைத் தளபதி மற்றும் பொலிஸ் மாஅதிபர் உள்ளிட்டோரையும் யுத்தநிறுத்த கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்ட பிரதிநிதிகள் மற்றும் கடற் கண்காணிப்பாளர்களையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது தெரிந்ததே.

## ஆழிப்....

கட்டமைப்பு சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுமானால் டிசம்பர் மாதம் 26ஆம் திகதி ஏற்பட்ட மாபெரும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைவரினதும் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப இது உதவும் என அமெரிக்கா நம்புகிறது.

சட்டரீதியான கட்டுப்பாடுகள் காரணமாக ஆழிப்பேரலை நிவாரண சபையுடன் இணைந்த நம்பிக்கை நிதியத்திற்கு அமெரிக்கா பங்களிப்பு வழங்காது என தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இலங்கையை மீளக் கட்டியெழுப்புவதற்காக அமெரிக்கா 130 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஒதுக்கியுள்ளது.

உள்நாட்டு மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக மேற்கொள்ளப்படும் புனரமைப்புத் திட்டங்களுக்கு இந்த நிதியத்திலிருந்து ஒரு பகுதி வழங்கப்படும். வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் இந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் புனரமைப்புத் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன.

அமெரிக்கா இந்த நம்பிக்கை நிதியத்திற்கு பங்களிப்பு வழங்காத போதிலும் ஏனைய நன்கொடையாளர்களின் பங்களிப்பினை அது வரவேற்றுள்ளது எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள்....

விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அவர் இச்சட்டமூலம்வெளிநாடுகளிலுள்ள தமிழ் மக்கள் இலங்கையிலுள்ள உறவினர்களுக்கும் பொது நிறுவனங்களுக்கும் அனுப்பும் பணம்கூட தடுக்கப்படலாமென அச்சம் வெளியிட்டார். 1977 ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டபோது இச்சட்டம் பயங்கரவாதத்தை ஒடுக்கவே கொண்டுவரப்பட்டதாக அப்போதைய சனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்த போதிலும் பாதிக்கப்பட்டது தமிழ் மக்களே ஆவார் என்றார். இச்சட்டமூலம் குறித்து சபையில் மகேஸ்வரன் உரையாற்றுகையில்;

தமிழ் உணர்வே இல்லாத கதிர்காமரால் பயங்கரவாத நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதானது தமிழர்களின் போராட்டத்தை நசுக்கவே என்றார். தமிழர்கள் ஒடுக்கப்பட்டாலும் அவர்கள் எழுச்சி பெறுவார்கள். பல்வேறு அழுத்தங்கள் மத்தியில் ஒடுக்குமுறைக்கு எதிராக தமிழினம் சளைக்காமல் போரிடும் தமிழர் போராட்டத்தை நசுக்கும் சட்டமூலமாகவே இதனை நோக்க வேணடியுள்ளது. என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# யாழ். இல் சுனாமியால் பாதிக்கப்பட்ட பதினைந்து பாடசாலைகள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சேதமடைந்து போன 15 பாடசாலைகளை மீள் நிர்மாணம் செய்யும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கபட்டுள்ளதாக யாழ்.மாவட்ட சுனாமி அனர்த்த புனர்வாழ்வுக் கிளையின் தகவல் பிரிவு அறிவித்துள்ளது.

இப் 15 பாடசாலைகளையும் சர்வதேச மற்றும் உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் மீள் நிர்மாணம் செய்து வருகின்றன.

இதில் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனம் ஆறு பாடசாலைகளையும், ஐக்கியநாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் இரண்டு பாடசாலைகளையும், எஸ்-டி-சி-என்ற அரச சார்பற்ற நிறுவனம் ஐந்து பாடசாலைகளையும், ஜே-ஐ-சி-ஏ என்ற அமைப்பு மற்றும் றொட்றி இன்ரநசனல் ஆகிய அமைப்புக்கள் தலா ஒவ்வொரு பாடசாலைகளாக மொத்தம் இரண்டு பாடசாலைகளையும் நிர்மாணித்துவருகின்றன என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# லெப்.கேணல் முத்தலிப்கொலை ஊடகவியலாளர் சஞ்சீவ் கைது

(கொழும்பு)

லெப்.கேணல் நிஷாம் முத்தலிப்பின் கொலை தொடர்பில் விசாரணைக்கென ஊடகவியலாளரான சஞ்சீவ் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவர் நேற்றுக் களனியில் வைத்து கைதுசெய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.ஏற்கனவே இச்சம்பவம் தொடர்பில் இரண்டு சிங்களவர்கள் உட்பட ஆறுபேர் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.நேற்று கைது செய்யப்பட்ட சஞ்சீவ் என்பவரின் உதவியுடனையே முத்தலிப் கொலைக்குரிய ஆயுதங்கள் ஊடகத்துறையினரின் வாகனத்தில் எடுத்து வரப்பட்டதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.நேற்றுக் கைது செய்யப்பட்டவரிடம் இருந்து ஐ.தே.கட்சியினரின் ஊடகப்பிரிவிற்கான அடையாள அட்டை ஒன்றும், அதேபோல் அரசாங்கதிணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட அடையாள அட்டை ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர். (32)

# நிறுத்தலளவைக் கருவிகளுக்கு முத்திரையிடல்

வட்டக்கச்சிப் பகுதியில் பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தலளவைக் கருவிகளையும் சரிபார்த்து முத்திரையிடும் செயற்பாடு நேற்றுஆரம்பித்து வரும் 15ஆம் நாள் வரை வட்டக்கச்சி அங்காடித் தெருவில் அமைந்துள்ள நிறுத்தலளவைப் பிரிவுச் செலயகத்தில் இடம்பெறவுள்ளது. நிறுத்தலளவைக் கருவிகளைப் பயன்படுத்தும் அனைவரும் குறித்த நாளில் அவற்றை முத்திரையிட்டுக் கொள்ளுமாறு நிறுத்தலளவைப் பிரிவு வருவாய்ப் பகுதியினர் வேண்டிக்கொள்கின்றனர்.

# முல்லை நகரில் தொலைபேசி இணைப்பு

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு மக்களின் தொலைபேசி தேவையை பூர்த்தி செய்யும் முகமாக இன்றுமுதல் புதிய தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படுகிறது. தொலைபேசி வசதியை பெறுவதற்காக நீண்டதூரங்கள் வரை சென்று பெரும் சிரமங்களை எதிர் கொண்டுவருகிறோம். எனவே எமது பாவனைக்கான தொலைபேசி இணைப்புகளை விரைவாக வழங்க வேண்டும் என முல்லைத்தீவு மக்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்த நிலையில் அப்பகுதிமக்களின் சிரமத்தையும் நீக்கும் முகமாக தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தல் பிரிவினரால் இன்று முல்லை நகரில் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படுகின்றன என ஒழுங்கு படுத்தல் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு வழங்கப்படுகின்ற இணைப்புக்கள் மூலம் மக்கள் உள்ளூர் வெளியூர் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (லோ)

# புலமைப் பரிசில் பரீட்சை

ஏசியன் கணனி கல்வி நிறுவனம் வழங்கும் கணனி கற்றை நெறிகளை தெரிவு செய்வதற்கான புலமைப்பரிசில் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இலவச அனுமதிகளை பெற்றவர்கள் நேரடியாக பரீட்சை நிலையங்களுக்கு செல்ல முடியும் எனவும் இதுவரை அனுமதிகளை பெறாதவர்கள் இன்று ஏசியன் கிளைகளாகிய யாழ்பாணம், சாவகச்சேரி, நெல்லியடி,சுன்னாகம் மற்றும் கிளிநொச்சி (கணனியியல் கல்லூரி)ஆகியவற்றில் பெற்றுக் கொள்ளமுடியும். அல்லது பரீட்சை தினமாகிய நாளை பரீட்சை மண்டப வாயில்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ஏசியன் கணனி கல்வி நிறுவன நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

## பொதுக்கட்டமைப்பை நடை....

வைத்தனர்.

குறிப்பிட்ட இடத்திலிருந்து பேரணியாக புறப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரதேச செயலகத்தைச் சென்றடைந்து பிரதேச செயலாளர் என். சிறீசங்கரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்றை சிறிலங்கா சனாதிபதிக்கு அனுப்பி வைப்பதற்காக கையளித்துள்ளனர்.

அதில் குறிப்பாக 200 மீற்றர் கடல் பாதுகாப்பு வலய எல்லையை குறைந்தது 100 மீற்றராகக் குறைக்கும்படி வலியுறுத்தப்பட்டுள்ளது.

# கருத்துப்படங்கள்

வாசகர்களிடமிருந்து கருத்துப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. தரமான கருத்துப்படங்கள் ஈழநாதம் நாளேட்டில் பிரசுரிக்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
**பிரதம ஆசிரியர்,**
**ஈழநாதம்,கிளிநொச்சி.**

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.